## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி


02.08.2023 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி - திருப்பலி 02

04.08.2023 புனித ஜான் மரிய வியான்னி - திருப்பலி 03

05.08.2023 புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு-திருப்பலி 04

06.08.2023 பொதுக்காலம் 18ம் ஞாயிறு (தோற்ற மாற்றம்) - திருப்பலி 05

13.08.2023 பொதுக்காலம் 19ம் ஞாயிறு - திருப்பலி 06

15.08.2023 மரியாவின் விண்ணேற்பு-சுதந்திர தின விழா - திருப்பலி 08

19.08.2023 புனித ஜான் யூட்ஸ் - திருப்பலி 09

20.08.2023 பொதுக்காலம் 20ம் ஞாயிறு - திருப்பலி 10

22.08.2023 அரசியான புனித கன்னி மரியா - திருப்பலி 12

24.08.2023 புனித பர்த்தலமேயு திருத்தூதர் - திருப்பலி 13

25.08.2023 அருளாளர் மரிய ட்ரொங்க்காத்தி - திருப்பலி 14

27.08.2023 பொதுக்காலம் 21ம் ஞாயிறு - திருப்பலி 16

28.08.2023 அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா நினைவு 17

29.08.2023 புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் - திருப்பலி 18


## பகுதி 2: நம்பிக்கையில் வளர...


விண்ணேற்பு அன்னை விடுதலையின் அன்னை 19

புனித பர்த்தலமேயு திருத்தூதர் வாழ்வை அறிவோம் 21

அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா வாழ்வு நமக்கு தரும் பாடம் 24

திருஅவைச் செய்திகள் 27

## பகுதி 1: வழிபாட்டு வழிக்காட்டி

## 02.08.2023 அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கி திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

இறை இயேசுவின் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, சலேசிய சபையின் ஆசீர்வதிக்கப்பட்ட அகஸ்துஸ் சர்தோரிஸ்கி அவர்களின் திருவிழாவை இன்று நாம் கொண்டாடி மகிழ்கின்றோம். இவர் 1858ம் ஆண்டு ஆகஸ்டு 2ம் நாள் பாரிசில் போலந்து இளவரசர் லாடிஸ்லாவ் மற்றும் ஸ்பெயின் ராணியின் மகள் இளவரசி மேரி அம்பாரோ ஆகியோருக்கு மகனாக பிறந்தார். இவர் தனது 6வயதில் தாயை இழந்தார். இவர் நேர்மையாகவும், புத்திச்சாலியாகவும், எளிமையான இதயம் கொண்டவராகவும் திகழ்ந்தார். தனது செல்வங்களையும் அரச பதவிகளையும் துறந்து சலேசிய சபையின் ஆன்மீகத்தைப் பின்பற்றினார். புனித தொன் போஸ்கோ வழியில் இளைஞர்களுக்காக தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டு உழைத்தார். காசநோயின் காரணமாக உயர்கல்வி பயில தடையாக இருந்தது. புனித தொன் போஸ்கோவை தூரினில் சென்று சந்தித்து வருவார். இவரது உடல்நோய் காரணமாக இவரை சலேசிய சமூகத்தில் சேர்க்க புனித தொன் போஸ்கோ தயங்கினார். பின்பு திருத்தந்தையின் அறிவுரையின்படி சலேசிய சபையில் சேர்க்கப்பட்டார். இவர் 1892ம் ஆண்டு குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். 1893ம் ஆண்டு ஏப்ரல் 8ம் நாள் தனது 35வது வயதில் இறைவனடி சேர்ந்தார். இவரது எளிமையான வாழ்வும், நேர்மையான சிந்தனையும் நம்மிலும் வளர வேண்டுமென்று இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நேர்மையாளரின் தந்தையே, எங்களை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உம் மந்தைகளாகிய மக்களை நேர்மையான பாதையில் நடத்திச்செல்ல உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. எங்களுக்காக தன்னுயிரை ஈந்தவரே, நாட்டையும், எங்களையும் ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் துயருறுவோரின் துயரம் போக்குபவர்களாக, கனிவுடையோராக, நீதியை நிலை நாட்டுபவர்களாக, இரக்கம் உடையவர்களாக, தூய்மையான உள்ளம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. பிறவிக் குருடருக்குப் பார்வை அளித்த மருத்துவரே, இன்று பிறந்திருக்கும் எண்ணற்ற குழந்தைகள் பிறவிலேயே பார்வையிழந்து, பலவிதமான குறைபாடுகளோடு பிறக்கின்றார்கள். இத்தகைய குழந்தைகளை நீர்தாமே முழுமையான சுகமளித்து இவ்வுலகில் மற்ற குழந்தைகள்போல் மகிழ்வோடு வாழ அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 04.08.2023 புனித ஜான் மரிய வியான்னி திருப்பலி

**முன்னுரை**

திருமதி. லதா சுரேஷ்

இறையேசுவின் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் புனித ஜான் மரிய வியான்னி ஒரு விவிசாயக் குடும்பத்தில் மத்தேயு, மேரி என்ற பெற்றோருக்கு மகனாக 1786 மே 8ந் தேதி பிறந்தார். மரிய வியான்னி தன்னுடைய 16ம் வயதில் குருவாக வேண்டுமென்று விரும்பினார். மூன்றாண்டுகளுக்கு பிறகு இவரது தந்தை வியானியின் விருப்பத்திற்கு இணங்கினார். பங்குத்தந்தை நடத்தி வந்த வகுப்புகளுக்கு சென்று குருத்துவப் பயிற்சிப் பெற்றார். 1812ல் இளம் குரு மாணவர் இல்லத்தில் சேர்ந்தார். அங்கிருந்த 200மாணவர்களில் இவரே கடைசியாக இருந்தார். பின்பு குருத்துவக் கல்லூரியில் பயின்று குருப்பட்டம் பெற்று பங்கு தந்தைக்கு உதவியாக மூன்றாண்டுகள் பணிபுரிந்தார்.

மக்கள் அதிகம் இல்லாத ஆர்ஸ் என்ற கிராமத்தின் ஆலயத்துக்கு பங்குத் தந்தையாக அனுப்பப்பட்டார். அங்கு 200 பேர் மட்டுமே இருந்தனர். அவர்களும் சமயப் பற்று இல்லாதவர்களாக இருந்தனர். தலைமை குரு வியான்னியிடம் அப்பணியைக் கொடுத்தபோது "கடவுள் அன்பற்ற மக்களிடம் அவர் அன்பை உணரச் செய்வதே தனது பணி என்று உணர்ந்தார்". இத்தகைய மேலான ஆன்மீகப் பணியை இவர் தனது உடனிருப்பாலும், போதனைகளாலும், தவ முயற்சிகளாலும் மக்களிடையே ஆற்றினார். அதிகாலையில் எழுந்து திருப்பலி ஆற்றிவிட்டு ஒப்புரவு அருளடையாள இருக்கையில் அமரும் இவரிடம் எண்ணற்றோர் ஒப்புரவு அருளடையாளம் பெற்றனர். உணவு உண்பதற்கும், நோயாளிகளைச் சந்திப்பதற்கும், மறைக்கல்வி வகுப்புகள் கற்றுக்கொடுப்பதற்கும் மட்டுமே சிறிது நேரம் ஒதுக்குவார். மற்ற நேரங்களில் ஒப்புரவு அருளடையாளம் வழங்கி வந்தார். 1856 ஆகஸ்டு 4ம் தேதி மரணமடைந்தார். 1905ம் ஆண்டு திருத்தந்தை 10ம் பயஸ் இவருக்கு அருளாளர் பட்டம் வழங்கி இவரை பங்குத்தந்தையரின் முன்மாதிரி என்று அறிக்கையிட்டார். 1925ல் திருத்தந்தை 11ம் பயஸ் புனிதர் பட்டம் வழங்கினார். பங்குத்தந்தையின் பாதுகாவலரான புனித ஜான் மரிய வியான்னியின் அழியாத உடல் இன்றளவும் ஆர்ஸ் தேவாலயத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. இத்திருப்பலியில் குருக்களுக்காகவும், நம் பாவங்களை நினைவுக் கூர்ந்து செபிப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. மனித இனத்தை, மீட்பின் பாதையில் அழைத்துச் செல்ல உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் தங்களுக்கு அளிக்கப்பட்ட பணியின் மகத்துவத்தை உணர்ந்து, இவ்வுலக ஆசையில் வீழ்ந்து விடாமல் இருக்க உமதருளைப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. படைப்பின் தொடக்கத்தில் வாழ்ந்த தலைவர்களைப் போன்று இன்றைய தலைவர்களும் இனி வருபவர்களும் தங்களின் சுயநலத்திற்காக ஜாதி, மத பிரிவினைகளை உண்டாக்கி அதில் ஆதாயம் தேடுபவர்களாக இல்லாமல் நீர்தாமே அவர்களோடிருந்து சமாதான சமத்துவ நல்லாட்சி நடத்த அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் இறைவா, இன்றைய புனிதர் மரிய வியான்னி தம் குறைகளை எண்ணி முடங்கிவிடாமல் இறையருளைப் பெற்று புனிதராக உயர்த்தப்பட்டதைப் போன்று எம் இளையோர்களும் தங்களுக்கு தேவையான கல்வி வசதி, வேலை வாய்ப்பு, பணவசதி இல்லாமல் தங்களிடமுள்ள திறமைகளை வெளிப்படுத்த முடியாமல் தவிப்பவர்களை நீர்தாமே வழிநடத்தியருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

## 05.08.2023 புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

இன்று புனித அன்னை மரியின் நினைவாக நேர்ந்தளித்த பேராலயத்தின் நினைவு நாளை கொண்டாடுகின்றோம். கி.பி. 431ல் எபேசு பொதுச்சங்கம் கூடியபோது மிகப்பெரிய விவாதமாக காரசாரமாக ஆதரித்தும் எதிர்த்தும் எழுந்த குரல்களில் ஒன்று, மரியா கன்னியா? அன்னையா? எப்படி இறைவனின் தாய்? என்ற கேள்விகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து திருவிவிலியம் பாரம்பரிய நடைமுறை வழி அனைத்து ஆதாரங்களையும் சுட்டிக்காட்டி மரியா இறைவனின் தாய் என அறிவித்து ஏற்றுக்கொண்ட நாள் அது. அதன் நினைவாக அதே ஆண்டு திருத்தந்தை மூன்றாம் சிக்ஸ்துஸ் உரோமையிலிருந்த லிபேரியன் பசிலிக்கா என்ற ஆலயத்தை மேலும் புதுப்பித்து பேராலயமாக அதனை அன்னை மரியாவுக்கு அர்ப்பணித்தார். இன்றைய இறைவார்த்தைகளும் யூபிலி கொண்டாட்டத்தில் கடைபிடிக்க வேண்டிய செயல்களையும், நற்செய்தியில் திருமுழுக்கு யோவானின் பற்றுறுதியும் இறையேசுவின் முன்னோடியாக திகழ்ந்து அவரை அறிவித்து தன்னை அர்ப்பணித்து சான்று பகிர்ந்ததையும் நினைவு கூர்ந்து தியானிக்கின்றோம். நாமே திருஆலயமாக வாழ வேண்டுமென திருவிவிலியம் கூறுகின்றது. அன்னையின் பெருமையை உலகறியச் செய்யும் ஆலயம் என்பது புனிதமானது, ஆகையால் நாமும் நலம் வளம் பலதரும் தூய ஆலயமாக உயர்ந்து நிற்க இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் பணியாளர்களான திருத்தந்தை, கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள் அனைவரும் தூய்மையாக உயர்ந்து நிற்கும்

பெருங்கோவிலாக நின்று மக்கள் நலனுக்காக தங்களையே முழுமையாக அர்ப்பணித்து வாழ வரம் வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பின் ஊற்றே எம் இறைவா, உலக மக்கள் அனைவரும் அன்னையைப்போல் இறைவார்த்தையை ஏற்று அதன்படி வாழ்ந்து தங்கள் பிள்ளைகளையும் இறைபக்தியில் வளர்க்கத் தேவையான அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் வடிவே இறைவா, அன்னைக்கு கொடியேற்றி விழா தொடங்கும் இம்மாதத்தில் அர்த்தமுள்ள விழாவாக கொண்டாட ஆசீர்வதியும். ஒற்றுமை, சமாதானம், மகிழ்ச்சி ஒவ்வொருவரிடமும் நிலவ வேண்டும். அதற்காக இவ்விழாவினை நாங்கள் தயாரித்து சிறப்புறச் செய்ய எங்களை ஆசீர்வதித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 06.08.2023 பொதுக்காலம் 18ஆம் ஞாயிறு (தோற்ற மாற்றம்) திருப்பலி

**முன்னுரை**

திரு. த. சாம்சன்

I. தானி. 7: 9-10, 13-14 II. 2பேதுரு 1: 16-19 மத். 17: 1-9

இயேசுவின் சீடர்கள் பேதுரு, யாக்கோபு, யோவான் ஆகியோருக்கு தனிமையில் தனது தோற்றத்தில் மாற்றத்தைக் காட்டிய நிகழ்வை இன்று நாம் கொண்டாடுகிறோம். திருமுழுக்கிலும், உருமாற்றத்திலும் மேகத்திலிருந்து "என் அன்பார்ந்த மைந்தன் இவரே" இறைத் தந்தையின் குரல் ஓங்கி ஒலிக்கிறது. இங்கு மேகமானது உலகிலுள்ள அனைவருக்கும் பொதுவானது என்றும், இறைவனும் அனைவருக்கும் பொதுவானவர் என்றும் நாம் உணர வேண்டும். எங்கும் நிறைந்திருக்கின்ற இறைவனில் நாம் தந்தைக்குரிய கண்டிப்பையும், தாய்க்குரிய பாசத்தையும் கற்றுக்கொள்வோம். அது நமக்கு நிறைவான மகிழ்ச்சியையும், அளப்பரிய அன்பையும் எடுத்துக்காட்டும் என்றும் அந்த அன்பில் வேரூன்றியவர்களாக வாழ்வோம்.

இவ்வுருமாற்ற நிகழ்வின் மூலம் நாம் இறைவேண்டலின் வழியாக இறைவனோடு நெருக்கமான உறவு கொள்ளவும் அவருடைய மாட்சியில் பங்கு பெறவும் நம்மை முழுமையாக இத்திருப்பலியில் அர்ப்பணிப்போம். நாம் அவரது சாயலில் படைக்கப்பட்டிருக்கிறோம் என்பதை உணர்ந்தவர்களாக இறைத் தந்தைக்கு பணிந்து வாழ்வதன் மூலம் அவருடைய ஈடு இணையற்ற அன்பை பெறமுடியும் என்பதை உணர வேண்டும். துன்பங்கள், துயரங்கள், சோதனைகள், தோல்விகள் நமக்கு நிரந்தரமல்ல, அவைகள் நமது வெற்றியின் படிக்கட்டுகள் என்பதை உணர்ந்து, துணிவுடன் எதிர்க்கொண்டால் நாமும் இயேசு கடைப்பிடித்த எளிமை, தாழ்ச்சி, கீழ்ப்படிதல், பணிவு போன்ற நற்குணங்களை பெற்றுக்கொண்டு இறையாட்சி என்னும் மீட்பில் உருமாற்றம் பெற்றவர்களாக வாழ்வோம் என்ற உறுதியான நம்பிக்கையோடு இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தந்தையின் விருப்பத்தை நிறைவேற்ற உம்மையே வெறுமையாக்கிக் கொண்டவரே, உம் பிள்ளைகளான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் இறைத் திருவுளத்திற்கு பணிந்து நீர் பெற்ற அருட்கொடைகளை இவர்களும் பெற்று உம் மந்தையை பேணி பாதுகாத்திட வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. "என் அன்பார்ந்த மைந்தன் இவரே, இவர் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்" என்று மொழிந்த தந்தையே, இதோ உம்மால் தெரிந்துக்கொள்ளப்பட்ட நாட்டுத்தலைவர்கள், உம்மை நினைவில் கொண்டு நேர்மையான உள்ளத்தோடு மக்களுக்காக பணி செய்யும் தியாக உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. பாதுகாத்து பராமரித்து வழிநடத்தும் தந்தையே, நாடுகளில் நடைபெறும் வன்முறைகளையும், அத்துமீறல்களையும் நீர் கண்ணோக்கும். அனைவரும் ஒரே நாட்டினர், ஒரே குடும்பத்தினர் என்ற உணர்வோடு சமாதானம், ஒற்றுமை, விட்டுக்கொடுக்கும் நல்ல மனம் கொண்டவர்களாக வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் படிக்கும் பிள்ளைகள் தங்களின் பெற்றோர்கள், ஆசிரியர்களை மதித்து எதிர்கால வாழ்வை நனவாக்கவும், இறையரசு பணியில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்ளவும் வேண்டிய அறிவையும், ஞானத்தையும் அளித்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 13.08.2023 பொதுக்காலம் 19ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை** திரு. செபாஸ்டின்

I. 1அர. 19:9.11-13 II. உரோ. 9: 1-5 மத். 14: 22-23

இயேசு கிறிஸ்துவின் வழியாய் கடவுளுக்கு உகந்த ஆவிக்குரிய பலிகளைப் படைக்கும் திருக்கூட்டமே இன்று பொதுக்காலம் 19ம் ஞாயிறு. கடவுள் இயற்கையின்மீது ஆற்றல் உள்ளவர், இயற்கை அவருக்கு கட்டுப்பட்டது என்பதை இன்றைய முதல் வாசகமும் நற்செய்தியும் எடுத்தியம்புகின்றன. எலியாவை உறுதிப்படுத்தும் விதமாக இறை பிரசன்னம் வெளிப்படுத்தப்படுகிறது. எலியாவோ "படைகளின் ஆண்டவர்மீது பேரார்வம் உள்ளவனாக இருக்கிறேன்" என முழங்குகிறார். சீனாய் மலையில் இறைவன் கடந்துபோகும்போது மெல்லிய ஒலியில் இறை பிரசன்னத்தை உணர்கிறார் எலியா. நற்செய்தியில் இயேசு கடல்மீது நடந்து

சீடர்களின் நம்பிக்கையை ஆழப்படுத்தும் விதமாக இறைப்பிரசன்னத்தை வெளிப்படுத்துகிறார். இயேசு கடல்மீது நடப்பதைக் கண்ட சீடர்கள் பேய் என அஞ்சினர். இயேசு நான்தான் அஞ்சாதீர்கள் என்றார். இயேசு கடல்மீது நடப்பதிலிருந்து தமது இலகுத் தன்மையையும், இறைத்தன்மையையும் வெளிப்படுத்துகிறார். படகில் இருந்தோர் உண்மையாகவே நீர் இறைமகன்" என்று தம் நம்பிக்கையை வெளிப்படுத்துகின்றனர். இன்றைய நற்செய்தியில் இன்னுமொரு மறைபொருளும் உண்டு. தண்ணீர்மீது நடப்பதன்மூலம் தன் சீடர்களுக்கு நம்பிக்கை பயிற்சியை அளிக்கிறார் ஆண்டவர். அன்புக்குரியவர்களே, எலியாவும், பேதுருவும் இறை நம்பிக்கையை வெளிப்படுத்தினார்கள். நமது நம்பிக்கையை இயற்கைமீது வைக்காமல் இறைவன்மீது வைக்க வேண்டும். படைத்தவரை விட்டுவிட்டு படைப்பு பொருள்கள்மீது நம்பிக்கை வைத்து வாழ்கின்றோம். அதனால்தான் அச்சம், பயம், தயக்கம் நம்மை சூழ்ந்துக்கொள்கிறது. வான சாஸ்திரத்தில் நம்பிக்கையை அடகுவைக்காமல், சர்வத்தையும் படைத்து ஆள்பவருக்கு அடிமையாக அவரோடு அவரில் என்ற முழு நம்பிக்கையோடு, அஞ்சாமல் வாழ பேரார்வத்துடன் இப்பலியில் பங்கேற்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இரக்கம் மிகுந்த இறைவா, புனித திருஅவையின்மீது உமது ஆவியை பொழிந்தருளும். அதன் பணியாளர்களும் இறைமக்களும் உண்மை உறவை பேணி உமக்கு சான்றுபகரும் வாழ்க்கை வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

2. இயற்கைமீது ஆற்றல் கொண்ட இறைவா, எம் நாடு நீர் வளத்தாலும் நிலவளத்தாலும் நிரம்பிட ஆசீர்வதியும். நல்ல விளைச்சலும், நற்கனிகளும் நிறைந்து மக்கள் பஞ்சம், பசி, பட்டினியின்றி வாழ்ந்திட அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகின்றோம்.

3. அஞ்சாதே நான் என்றும் உன்னோடு என்ற இறைவா, எங்கள் வாழ்வில் வரும் துன்ப துயரங்கள், வேதனை சோதனைகளின்போது மனம் கலங்காமல் உம்மில் முழு நம்பிக்கை வைக்கவும், உம்மிடமே எங்கள் வாழ்வை ஒப்படைத்து வாழ தேவையான "நம்பிக்கை" எனும் வரத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. ஆயனில்லா ஆடுகள்மீது அக்கறைக்கொண்ட இறைவா, தன் நாட்டையும் இனத்தையும் பிரிந்து அகதிகளாய் வாழ்வோருக்கும், ஓர் இனம் மற்றொரு இனத்திற்கு எதிராக வன்முறையிலும், கலகங்களும், சூழ்ச்சியாக மனித உயிர்களை வேட்டையாடும் இந்நிலை மாறி மானுடத்தில் மனித நேய உணர்வுகள் தழைத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# 15.08.2023 மரியாவின் விண்ணேற்பு-சுதந்திர தின விழா திருப்பலி

**முன்னுரை** திரு.ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. தி.வெ 11: 19, 12:1-6.10 II. 1கொரி. 15: 20-26 லூக். 1: 39-56

திருமுழுக்கின்மூலம் இயேசுவோடு வாழும் திருஅவையின் நம்பிக்கையாளர்களே, இன்று நமது நாடு சுதந்திரம் அடைந்து 77வது ஆண்டை நாம் நினைவு கூறுகின்றோம். அதோடு கூட அன்னை மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவையும் கொண்டாட திருஅவை நம்மை அழைத்திருக்கிறது. மரியன்னையின் விண்ணேற்பு விழா என்பது உலகிலுள்ள அனைத்துக் கத்தோலிக்க கிறிஸ்தவர்கள் கொண்டாடும் ஒரு விழா. இந்த விழா ஆகஸ்டு மாதம் 15ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. திருத்தந்தை 12ம் தேதி கொண்டாடப்பட்டு வருகிறது. திருத்தந்தை 12ம் பத்திநாதர் 1954ம் ஆண்டு "அன்னை மரியா, ஆன்மாவோடும், உடலோடும் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார்" தூய ஜெரோம், "அன்னை மரியா இந்த மண்ணுலகில் வாழ்ந்தபோது பிறர்படக்கூடிய துன்பத்தை தன்னுடைய துன்பமாகப் பார்த்தார். மேலும், அத்துன்பம் நீங்க பெரிதும் பாடுபட்டார்" என்று கூறுகிறார். நற்செய்தியில் அன்னை மரியா எலிசபெத்தின் பேறுகால வேதனையில் அவருக்கு உதவி செய்ய ஓடோடிச் செல்கிறார்.

நமது நாடு சுதந்திரம் அடைய மக்களின் துயர் நீங்க எத்தனையோ தலைவர்கள் தங்களது இன்னுயிரை தியாகம் செய்துள்ளார்கள். இங்கு நம் அன்னை மரியா தியாகத்தின் வடிவமாக மனுக்குல மீட்பிற்காக பல்வேறு இன்னல்கள் மத்தியில் ஆண்டவர் இயேசுவைத் தன் வயிற்றில் சுமந்துக் கொண்டு துணிவோடு செயல்பட்டார். நம் அன்னை விடுதலையின் அன்னை இயேசு விட்டுச்சென்ற இறையாட்சியின் மதிப்பீடுகளான உண்மை, அன்பு, பரிவு, நீதி, சமத்துவம், பிறர்நலம், அமைதி, துன்பங்களை ஏற்கும் மனநிலை ஆகியவற்றை தம் வாழ்வில் வாழ்ந்து காட்டினார். இத்திருப்பலியில் சுதந்திரத்திற்காக பாடுபட்டவர்களின் தியாகத்தை நினைவு கூர்வோம். இந்தியா என் தாய்நாடு, இந்தியர் அனைவரும் என் உடன் பிறந்தோர் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்று வாழ்வோம், நமக்குள் கிறிஸ்தவர், முகமதியர், இந்துக்கள் என்ற வேறுபாட்டை நீக்கி ஒற்றுமையுடன் வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முழு விடுதலையை நோக்கி எம்மை வழிநடத்தும் ஆண்டவரே, உமக்கு ஊழியம் செய்ய சிறப்பான விதத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அருட்பணியாளர்கள், துறவிகள் ஆகியோர் சந்திக்கும் ஆன்மீக போராட்டம், உடல் உள்ளம் மனம் சார்ந்த போராட்டம் அனைத்திலும் விடுதலைத் தந்து துணைநின்று காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார், பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார் என்ற அன்னை மரியாவின் பாடலுக்கேற்ப இன்று சுதந்திர தின விழாவைக் கொண்டாடும் எம் இந்திய நாட்டில் பஞ்சம், லஞ்சம், வறுமை, தற்கொலை, கொலை, கொள்ளை, பாலியல் வன்முறை, விலைவீழ்ச்சி போன்ற கொடுமைகள் நீங்கி இல்லாமை ஒழிந்து மக்களின் வாழ்வுநிலை பாதுகாக்கப்பட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.
3. கண்ணீரோடு விதைப்பவர்களுக்குக் களிப்பான அறுவடையை தருகின்ற இறைவா, எம் இந்திய நாட்டில் அனைத்து விவசாய பெருமக்கள் படும் வேதனையைப் பாரும். தங்கள் வாழ்வையிழந்து, நீர்வளம், நிலவளம் குறைந்து வரும் இக்சூழலை மாற்றி நாடெங்கும் வளமை செழித்தோங்கி, மக்கள் மகிழ்வினை கண்டிட வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.
4. விண்ணகத்தையும், மண்ணகத்தையும் படைத்த தந்தையே, எங்கள் நாட்டின் நலனுக்காகவும், விடுதலைக்காக உழைத்த தியாக உள்ளங்களின் குடும்பங்களை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் குடும்பங்களை நீர் கண்ணோக்கும், பெற்றோர், பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள், வழிகாட்டிகள் அனைவருக்கும் நல்ல உடல்உள்ள நலனளித்து பாதுகாத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 19.08.2023 புனித ஜான் யூட்ஸ் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

இறையேசுவில் இனிய திருக்குலமே, இன்றைய தினம் நம் திருஅவை புனித ஜான் யூட்ஸ் என்னும் புனிதரின் விழாவினை சிறப்பிக்கின்றது. பிரான்ஸ்நாட்டிலுள்ள ரீநார்மண்டி என்னும் இடத்தில் 1601ம் ஆண்டு நவம்பர் 14ல் பிறந்தவர். பெற்றோர்கள் தந்தை ஐசக் யூட்ஸ் ஒரு அறுவை சிகிச்சை நிபுணர், தாய் மார்த்தா கார்பின். தனது 14ம் வயதிலேயே தூய்மையாளனாக இருக்க சபதம் எடுத்தவர். யூட்ஸ்கேனில் உள்ள ஜேசுயிட்களின் கீழ் பயின்றவர். பின் இயேசு கிறிஸ்துவுடன் பரிசுத்த ஆவியின் உறவு இதை வகைப்படுத்தப்பட்ட வலுவான வணக்க உணர்வு இவையுடன் கூடிய ஒரு பிரெஞ்சு பள்ளியில் உறுப்பினரானார். புனித ஜான் யூட்ஸ் 1625 டிசம்பர் 20ல் குருவானார். இவர் 1633ம் ஆண்டு முதல் திருஅவை பணிகளை செய்யத் தொடங்கினார். பிரான்ஸ் மற்றும் பர்கண்டி, பிரிட்டானியா ஆகிய பகுதிகளில் தனது பணியைத் தொடங்கினார். பிரபலமான போதகராகவும், வாக்கு மூலத்தில் நற்செய்தி பணி செய்வதற்கான திறமையும் பெற்று பாரீஸ், ஆஸ்திரேலியாவிலும் நற்செய்தி அறிவித்தார். விபச்சாரத்தில் ஈடுபட்ட பெண்களுக்கு அடைக்கலம் வழங்க "கெய்னில் அடைக்கல பெண்மணியின் அறக்கட்டளை" என்ற ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தார்.

திருத்தந்தை 7ம் அலெக்சாண்டர் அவரிடமிருந்து ஒப்புதல் பெறப்பட்டு 1644ல் அருட்சகோதரிகள் தங்குவதற்கான சபை நிறுவப்பட்டது.

மரியாவின் புனித இதயத்தின் வழிபாட்டு வழிகாட்டி ஆசிரியர் என்னும் பட்டத்தை வழங்கினார். கடவுளின் அன்னையின் மாசற்ற இதயத்தின் விழா முதன் முதலில் 8 பிப்ரவரி 648ல் கொண்டாடப்பட்டது. பின்னர் 19ம் தேதி, ஆகஸ்டு 1680ல் கேனில் இறந்தார். 1925, மே 31ல் திருத்தந்தை பயஸ் அவர்களால் புனிதர் பட்டம் பெற்றார். குருக்களின் ஆடை, புனித இதயம் இவற்றை தனது பண்புகளாக பெற்றிருந்தார். இத்தகைய புனிதரின் முன்மாதிரியைப் பின்பற்றி வாழ இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. அனைத்துலக அரசரே இறைவா, உம் வழித்தோன்றலான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், துறவற கன்னியர் மற்றும் திருநிலையினர் அனைவரும் முன் மாதிரிகையாகவும் உம் நற்செய்தியின் தூதுவர்களாகவும் வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.
2. உண்மையின் நாயகனே இறைவா, ஆதரவற்ற மக்களாக, நோயாளிகளாக, மருத்துவமனைகளிலும், தெருவோரங்களிலும் நலிந்து காணப்படும் மனித இனத்தை பாதுகாத்து அவர்களுக்கு வேண்டிய தேவைகளையளித்து, நோயிலிருந்து குணமளித்து புதுவாழ்வளிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. திருஅவையின் தலைவரே எம் இறைவா, அறுவடையோ மிகுதி, வேளையாட்களோ குறைவு என்ற உம் வாக்கிற்கேற்ப குருத்துவ அருட்பணியாளர்கள் குறைந்துவரும் இக்காலக் கட்டத்தில் ஒவ்வொரு பெற்றோருக்கும் வருங்கால சந்ததியினருக்கும் திருஅவையை வளர்த்தெடுக்கும் பணி தமக்கு கொடுக்கப்பட்டிருக்கின்றது என்பதை உணர்ந்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 20.08.2023 பொதுக்காலம் 20ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திரு. ஆ. பிரான்சிஸ் அலாய்சியஸ்

I. எசா. 56: 1, 6-7 II. உரோ. 11: 13-15, 29-32 மத். 15: 21-28

இறைவேண்டல் செய்ய ஆலயத்திற்கு மகிழ்வுடன் கல்வாரிப் பலி நிறைவேற்ற வந்திருக்கும் இறைச் சமூகத்தை அன்புடன் வரவேற்கின்றோம். முதல் வாசகத்தில் எருசலேம் ஆலயம் யூதர்களுக்கு மட்டும் செபவீடல்ல, எல்லா மக்களுக்கும் செபவீடு என்பதை ஆண்டவர் குறிப்பிடுகிறார். ஆண்டவரோடு இணைத்துக்கொண்டு நீதியோடும் நேர்மையோடும் வாழ்பவர்கள் அனைவரும் இறைவனின் பிள்ளைகள் என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இரண்டாம் வாசகத்தில் புனித

பவுல் எவ்வினத்தாராயினும் கடவுளுக்கு அஞ்சி நடந்து நேர்மையாக செயல்படுபவரே கடவுளுக்கு ஏற்புடையவர் என்ற கருத்தை எடுத்துக் கூறுகிறார். நற்செய்தியில் பிற இனத்தாரான கானானியப் பெண்ணின் நம்பிக்கை எத்தன்மையானது என்று இயேசு கிறிஸ்து இங்கு நமக்கு வெளிப்படுத்துகிறார். பிற சமயத்தவரான பெண்ணின் நம்பிக்கையை பாராட்டி அந்தப் பெண்ணின் மகள்மீது இரக்கம் கொண்டு குணமளிக்கிறார் இயேசு கிறிஸ்து. கானானியப் பெண்ணின் அசைக்க முடியாத நம்பிக்கை நமக்கு கற்றுத்தரும் பாடம் என்னவென்றால் நாம் மற்றவர்களையும், பிற சமயத்தவரையும் மதிப்பவர்களாய் இருத்தல் வேண்டும். அன்பு ஒன்றே நம்மிடம் இருக்கவேண்டும், மனிதம் போற்ற மனிதம் வளர்க்க பாடுபடுதல் வேண்டும். முதல் வாசகத்தில் வரும் இறுதி வசனம்போல் "என் இல்லம் மக்களினங்கள் அனைத்திற்கும் உரிய செபவீடு" என அழைக்கப்படும் சாதிய கொடுமைகளை ஒழிக்க வேண்டும், இல்லாதோர் வாழ்வு புத்துணர்ச்சி பெறவேண்டும், இறையரசை மண்ணில் மலரச் செய்ய வேண்டும், இயேசு கிறிஸ்துவை தலைவராக கொண்டு அவர் வழியில் செல்ல வரமருள வேண்டி இத்திருப்பலியில் பங்குபெறுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. ஞானத்தின் தொடக்கமே இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், அருட்பணியாளர்கள், இருபால் துறவறத்தார் அனைவரும் தம் சொல்லாலும், செயலாலும் உண்மைக்குச் சான்று பகரவும், எடுத்துக்காட்டான வாழ்வு வாழவும் தேவையான ஞானத்தை பொழிந்து பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தம் தாய்நாட்டின்மேல் பேரார்வம் கொண்டு கருணை காட்டிய அதிசயரே, எம் நாட்டின் தலைவர்கள், ஆட்சியாளர்கள், இந்திய நாட்டிலுள்ள மக்கள் அனைவரும் ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழவேண்டிய சூழ்நிலையை ஏற்படுத்தி, உமது இறையரசை மண்ணில் மலரச் செய்து, பாதுகாத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குழந்தைகள் விண்ணரசின் சொந்தங்கள் என்று மொழிந்த இறைவா, எம் குழந்தைகளுக்கு நல்ல உடல் நலம் கொடுத்து, எல்லாத் தீங்குகளிலிருந்தும் விலக்கி பாதுகாக்கவும், உம்மைப்போல ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. படைப்பின் பரம்பொருளே எம் இறைவா, இன்றைய நவீன உலகில் குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகளுடனும், கணவன் மனைவியோடும் சரியான புரிதல் இல்லாமல் வாழ்ந்துக் கொண்டிருப்போரை ஆசீர்வதியும். குடும்பங்களில் ஒற்றுமையும், சமாதானமும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## 22.08.2023 அரசியான புனித கன்னி மரியா திருப்பலி

**முன்னுரை**

திரு. ஜீசஸ் மகுட மன்னன்

இறையரசர் இயேசுவிலும், அரசியான கன்னி மரியாவிலும் பிரியமுள்ள சகோதர சகோதரிகளே, "அரசியான மரியா" விழாவை திருஅவை இன்று சிறப்பிக்கின்றது. மரியாவின் மரணச் செய்தியைக் கேட்ட புனித தோமா, கண்ணீர் வடிய விரைந்து வந்து அன்னை மரியாவின் கல்லறையைக் காணச் சென்றபோது, கல்லறை வெறுமையாய் இருந்தது. கன்னி மரியா "ஆன்மாவோடும், தூய உடலோடும் விண்ணகம் எடுத்துக் கொள்ளப்பட்டார்கள்" என்ற உயரிய உண்மையை அன்று, இயேசுவின் காயங்களில் விரலைவிட்டு இயேசு உயிர்த்தெழுந்த உண்மையை உலகுக்கு முன்பாக "என் ஆண்டவரே, என் தேவனே" என அறிவித்ததுபோல இதையும் அறிய காரணமாக இருந்தார். 1948ம் ஆண்டு திருத்தந்தை 12ம் பத்திநாதர் "மரியா ஆன்மாவோடும், தூய உடலோடும் விண்ணகம் எடுத்துக்கொள்ளப்பட்டார்" என்ற பேருண்மையை நம்பிக்கை அறிக்கையாக உலகுக்கு அறிவித்தார். (2ம் வத்திக்கான் சங்கம் திரு. எண் 59) என்ற இனிய செய்தியை மக்களுக்கு அறிவித்தது.

அன்னை மரியா இவ்வுலகத்தை விட்டு விண்ணம் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, ஒன்பது சபைகளின் வான தூதர்களும், வான் வீட்டில் வாழும் புனிதர்களும், கன்னி மரியாவை மகிழ்வுடன் வரவேற்றனர். தந்தையாகிய கடவுள், தமது பிரியமுள்ள தூய கன்னி மரியாவை ஏற்றுக்கொண்டு உலக மீட்பரின் வலது பக்க சிம்மாசனத்தில் அமரச் செய்தார். மூவொரு கடவுளர், கன்னி மரியாவுக்கு மூவுலக மகாராணியாக மகுடம் சூட்டிட வானகமே விழாக் கோலம் கொண்டாடியது. "நான் ஆண்டவரின் அடிமை, உம் சொற்படியே எனக்கு நிகழட்டும்" என்று கூறித் தன்னையே தந்தைக்கும் தரணிக்கும் அர்ப்பணித்த மகாராணியாக மகுடம் சூட்டப்படும் வரை "இறை வழியே என் வழி" என வாழ்ந்தார் அன்னை மரியா. "கன்னிமைக் குன்றா அரசி" என புனித எப்ரேமும் "பூவுலகையாளும் அரசரை ஈன்ற அன்னையே" என புனித கிரகோரி ஒசியான்களும், "மனுக்குலத்தின் அரசியே" எக் ரேத்தோ நகர் புனித ஆன்ட்ருவும் போற்றிப் புகழ்ந்த "மூவுலக மகாராணி அன்னை மரியா"வை நாமும் வாழ்த்தி வணங்கி நம் தாயாக ஏற்று வாழ இவ்விழாத் திருப்பலியில் பக்தியோடு பங்கேற்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. நலங்காக்கும் நாயகனே இறைவா, திருத்தூதர் பேதுருவின் வழித் தோன்றலான திருத்தந்தை பிரான்சிஸ், ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மக்களை நம்பிக்கையில் வழிநடத்தி இறைத் திருவுளம் அறிந்து வாழ்வதற்கு தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அமைதியருளும் தெய்வமே இறைவா, இயேசுவின் அன்னைக்கு ஒவ்வொரு நாளும் செபம் செபித்து, எங்கள் குடும்பங்களிலும், மணிப்பூரிலும் உலகமனைத்திலும் அமைதியும், ஒற்றுமையும், சமாதானமும் நிலவத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, எமது தாய் நாட்டில் இயேசுவின் படிப்பினைகளின்படி வாழும் மக்களை இரக்கத்துடன் கண்ணோக்கி, வழிநடத்தத் தேவையான தலைமைப் பண்புள்ள தலைவர்கள் உருவாக அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 24.08.2023 புனித பர்த்தலமேயு திருத்தூதர் திருப்பலி

**முன்னுரை**

திரு. செபாஸ்டின்

ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருக்கூட்டமே இன்று திருத் தூதரான புனித பர்த்தலமேயுவின் விழாவினைக் கொண்டாடுகின்றோம். இவர் முதலாம் நூற்றாண்டைச் சார்ந்தவர் மற்றும் 12 திருத்தூதர்களுள் இவரும் ஒருவர். இவரின் பழைய பெயர் நத்தனியேல். இவரை இயேசுவிடம் அறிமுகம் செய்தவர் திருத்தூதர் பிலிப்பு. இவரை கண்டவுடனே இயேசு புகழ்வதைப் பார்க்கிறோம். இவர் உண்மையான இஸ்ரயேல் கபடற்றவர். மறுமொழியாக புனிதர் "என்னை உனக்கு எப்படித் தெரியும்? அத்திமரத்தின் கீழ் உம்மைக் கண்டேன் என இயேசு கூற, உடனே, "ரபி, நீர் இறைமகன், நீரே இஸ்ரயேலர் மக்களின் அரசன்" என்றார். இயேசுவால் நேரடியாக அழைக்கப்படாமல் அவரைப் பற்றி கேள்விப்பட்டு பார்க்கப்போன நத்தனியேல் தன் முதல் சந்திப்பிலேயே "இயேசு இறைமகன், யூதர்களின் அரசன்" எனும் (மறை நூல் வாக்கை) மறைபொருளை வெளிப்படுத்துகிறார்.

இயேசுவின் உயிர்ப்பிற்கு பிறகு கிழகத்திய நாடுகளில் மிகவும் இக்கட்டான இடங்களில் வேதம் போதித்தார். லிக்கவோனியாவிலும், இறுதியாக பெரிய அர்மேனியாவிலும் மறைப்பரப்பு பணி செய்தார். அங்கு விக்ரக ஆராதனை செய்து வரும் யூதர்களின் சூழ்ச்சியால், சவுக்கால் அடிக்கப்பட்டு, தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு அல்லானு பட்டணத்தில் வேத சாட்சியாக மரித்தார். இவரது திருப்பண்டங்கள் உரோமையில் தைபர் நதிக்கரை ஓரம் உள்ள ஒரு தீவில் புனித பர்த்தலமேயு பேராலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. அன்புக்குரியவர்களே, இயேசுவால் அழைப்புப் பெற்ற நாம் எப்படிப்பட்ட இயேசு அனுபவம் பெற்றிருக்கிறோம், இயேசு நம்மைக் குறித்து, இவர் உண்மையான திருஅவை பணியாளன் என்று சொல்ல முடியுமா? இயேசுவுக்கும் நமக்குமுள்ள சீடத்துவ உறவை வளர்த்துக்கொள்ள அருள் வேண்டுவோம், கள்ளம் கபடமற்ற வாழ்வு வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. பெயர் சொல்லி அழைத்த இறைவா, திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் புனித பர்த்தலமேயுவிடம் விளங்கிய உண்மை, கபடற்ற மனம், இறைவெளிப்பாட்டை புரிந்து கொள்ளும் ஆற்றல் இவற்றை உள்வாங்கி தங்கள் சொல்லாலும், பணியாலும் திருஅவையை பேணி வளர்க்க அருள்வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

2. மனமாற்றம் தரும் இறைவா, எம் இந்திய தேசத்தில் உம் அன்பை அறியாதோரும், உம்மை வெறுப்பவர்களும் உமது பெயரை கேட்டாலே முகம் சுளிப்பவர்களின் இதயத்தில் நீர் இருப்பதை கண்டு கொண்டு மனம்மாறி தேசம் எழுச்சிப்பெற பாடுபடும் நல்ல உள்ளத்தை அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. வாழ்வளிக்கும் இறைவா, புனித பர்த்தலமேயுவைப் போல நாங்கள் எங்கள் வாழ்வில் கபடற்ற உள்ளம் கொண்டவர்களாகவும், இறை நம்பிக்கையில் சிறந்தவர்களாகவும் நாங்கள் வாழ தூய ஆவியாரின் அருள் கொடைகளை எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 25.08.2023 அருளாளர் மரிய ட்ரொங்க்காத்தி திருப்பலி

**முன்னுரை** திருமதி. டிலைலா சேவியர்

அருளாளர் மரிய ட்ரொங்க்காத்தி 1883ம் ஆண்டு பிப்ரவரி 16ம் நாள் கார்டினோ கோல்கி என்னுமிடத்தில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்தார். பெற்றோர் மற்றும் தன்னுடைய இளைய சகோதர சகோதரிகளின் அன்பு நிறைந்த மகிழ்ச்சியான குடும்பத்தில் வளர்ந்தார். அவரின் தந்தை மற்றும் பங்குத் தந்தையின் அறிவுரையின்படி தன் இளமைப் பருவம் முடியும்வரை காத்திருந்தாள். பின்னர் தகுந்த காலம் வந்ததும் சகோதரி மரிய 1908ம் ஆண்டு (Nizza) நிஷா மோன்பிராடோ (Monberato)வில் தன்னுடைய முதல் வார்த்தைப்பாட்டை அளித்தார். சகோ. மரியா வார்ஜி (Varazze) என்ற இடத்தில் செவிலியர் பயிற்சி பெற்றார். செஞ்சிலுவை சங்கத்தில் பணிபுரிந்த இவர் முதல் உலகப்போரின்போது காயமடைந்தவர்களுக்கு உதவி செய்தார். இவரது இத்தகைய அன்பு செயலால் அனைவராலும் ஈர்க்கப்பட்டார். மரியாவின் விருப்பப்படி 1922ம் ஆண்டு இக்விடாருக்கு இரு சகோதரிகளுடன் சுகார் மக்களிடையே பணிபுரிய அனுப்பப்பட்டார்.

இவர்களின் பயணம் மிகவும் கடினமாக இருந்தது. பலவகையான மனிதர்கள், இயற்கைச் சூழல், காட்டு விலங்குகள், வெள்ளப்பெருக்கு, சரியான பாதைகள் இல்லாமை போன்ற பல இன்னல்களை சந்தித்தனர். சகோதரி மரியா, மக்களுக்கும் அவர் தங்கியிருந்த ஊரிலுள்ள மக்களுக்கும் அர்ப்பணத்துடன் பணிபுரிந்தார். அங்கு மருத்துவர் இல்லை, மருந்தும் இல்லாத காரணத்தால் இங்கு தகுந்த மருத்துவராகவும், மருந்துகளையும்

இவரே ஏற்படுத்தினார். சிறுவர், சிறுமியருக்காக நியமிக்கப்பட்ட சகோதரி மரியா, அனைவருக்கும் நல்ல அன்னையாக இருந்தார்.

தாங்கள் தங்குவதற்கு தகுந்த சூழ்நிலையும் வசதிகளும் இல்லாதபோதும் எளிமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தார். சகோதரி மரியா இதனைக் குறிப்பிடும்போது "மிகவும் எளிமையான சூழ்நிலையாக இருந்தாலும், ஆன்மாக்களின் மீட்புப்பணியை செய்வதால் மகிழ்ச்சியாக உள்ளது" என்றும் குறிப்பிடுகிறார். சுகார் இன்டோ மக்களுக்கும், காலணி மக்களுக்கும் தன்னால் இயன்றவரை எல்லா நேரங்களிலும், சூழ்நிலைகளிலும் அவரின் கஷ்டங்கள் பாராமல், உதவிகளும் மருத்துவ பணிகளும் செய்து அனைவர் மனதிலும் இடம் பெற்றார். சகோதரி மரியாவும், மற்ற இரு சகோதரிகளும் 1969ம் ஆண்டு 25ம் நாள் ஆண்டு தியானம் செய்வதற்காக விமானத்தில் பயணப்பட்டார். விமானம் கிளம்பிய சிறிது நேரத்தில் விபத்துக்குள்ளாகியது. அந்த விபத்தில் சகோதரி மரியா மட்டும் பலியானார். இறையேசுவின் பணியாளர் சகோதரி மரிய நவம்பர் 8, 2008அன்று வணக்கத்துக்குரியவரென்று அறிவிக்கப்பட்டு மீண்டும் திருத்தந்தையின் பிரதிநிதியான கர்தினால் ஆஞ்சிலோ அமேட்டோவார். 2012 நவம்பர் 24 அருளாளர் நிலைக்கு உயர்த்தப்பட்டார். அருளாளர் மரிய ட்ரொங்க்காத்தியின் விழாவினை சிறப்பிக்கும் நாம் அவரைப்போல இயேசுவின்மீதும், அன்னை மரியாவின்மீதும் நம்பிக்கை வைத்து அனைத்து செயல்களையும் அர்ப்பணத்தோடு செய்ய இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், கன்னியர்கள், பொதுநிலையினர் அனைவரும் கிறிஸ்துவின் விழுமியங்களை இதயத்தில் ஏற்று, ஆழமாக பதித்து இறுதிவரை இறையரசை இவ்வுலகில் பறைசாற்றிட இவர்களுக்கு தேவையான ஆன்ம நலனும் உடல் நலமும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
2. வானகத் தந்தையே இறைவா, உமது பணியை தொடர்ந்து செய்திட உலகின் பல இடங்களுக்குச் சென்று பல இன்னல்களையும், தீமைகளையும், சந்திக்கும் மறைப்பரப்பாளர்களை அனைத்து விதமான தீமைகளிலிருந்தும் பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.
3. அன்பே உருவான இறைவா, இன்றைய விழாவினை சிறப்பிக்கும் அருளாளர் சகோதரி மரியாவைப்போல நாங்களும் எங்களுடைய இயலாத சூழலில் உம்மீதும், அன்னைமரியாள்மீதும் நம்பிக்கைக்கொண்டு செயல்பட வேண்டிய அனைத்து அருள்வரங்களையும் அளித்தருள உம்மை மன்றாடுகிறோம்.

## 27.08.2023 பொதுக்காலத்தின் 21ஆம் ஞாயிறு திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிவில்சன்

I. எசா. 22:19-23 II. உரோ. 11: 33-36 மத். 16: 13-20

இன்று பொதுக்காலம் 21ம் ஞாயிறை திருஅவை சிறப்பிக்கின்றது. பொதுவாக மனிதத்தின் எண்ணங்கள் எதுவும் நிலையானதல்ல. இவ்வுலகில் அனைத்தும் எனக்கு நிலைத்து இருக்கிறது என்ற எண்ணமே. இதனைத்தான் இன்றைய திருநூலின் இறைவாக்கும் திருவழிபாடும் நமக்கு உறுதியாக அறிவுறுத்துகின்றது. அரண்மனைக்கே பொறுப்பாளர் அதிகாரி என்ற நினைப்பில் உண்டு, குடுத்து களியாட்டம் மட்டுமல்ல தனக்குரிய பண படை பலத்தால் எதையும் சாதிக்க இயலும் என எண்ணி தனக்கென ஆடம்பரமாக ஒரு கல்லறையே கட்டி வைத்திருந்தார். அந்த ஆணவத்தை உடைத்தெறிந்து உனது என்கிற அனைத்தும் அழியும் வேறொருவர் வந்து ஆள்வார் என இறைவன் இறைவாக்கு உரைக்கின்றார். பேதுருவை முதன்மையாக்கி அவருக்கே அனைத்து அதிகாரத்தையும் இறைவன் வழங்குகின்றார்.

இன்றைய வாசகங்கள் தலைமைப் பொறுப்பைப் பற்றி பேசுகின்றன. தந்தையாம் இறைவன் தாவீதின் குடும்பத்தாருக்கு திறவுகோலை அளிப்பேன் என்றும் நற்செய்தியில் பேதுருவை அழைத்து விண்ணகத்தின் திறவுகோளை அவருக்கு அளிக்கின்றார். தனது சீடர்கள் அத்தனைப்பேர் இருந்தாலும் மீனவராகிய பேதுருவை தனது திருஅவையை வழிநடத்த அழைக்கின்றார். அதுமட்டுமல்ல இன்று புனித அகுஸ்தினாரின் அன்னை புனித மோனிகா அவர்களின் விழாவும் கூட. இந்த தாயால்தான் அகுஸ்தினார் பேறுபெற்றவரானார். நாமும் பிரதிபலன் எதிர்பாராமல் இறைவனை நாடிச் சென்று நிலைவாழ்வு பெற இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, திருஅவையின் இறை மக்களாகிய அனைவரும் என்றென்றும் நிலைத்திருக்கும் இறைவனைப் பின்பற்றி அவர்வழி நடந்து அவரது திட்டம் நிறைவேற்றி அனைத்து மக்களையும் அன்பின் பாதையில் நடத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மனிதம் புனிதமாக உம்மை இழந்த இறைவா, மனிதத்தின் இயல்பு ஆசை, பாசம், எதிர்பார்ப்பு என்ற நோக்கில் சென்று அது பேராசையாக மாறி அழிவிற்கு இட்டுச்செல்கிறது. யாரும் அழிவது உமது விருப்பமன்று என்பதை நாங்கள் உணர்ந்தவர்களாக நன்னெறியில் நடந்து என்றும் உமக்கேற்றவர்களாக வாழ வரமருள வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

3. மனமிரங்கும் இறைவா, அதிகார வர்கத்தின் ஆதிக்கம் கூடாது அன்பு ஒன்றே இவ்வுலகையாள வேண்டும், தவறிழைத்தாலும் மன்னித்து

ஏற்க வேண்டுமென பல உவமைகள் கருத்துகள் வழியாக எங்களை ஈர்த்த இறைவா, இன்றுள்ள சூழல் மனிதம் சிதைக்கப்படுகிறது. உமது பாதுகாப்பு நாடி நிற்கின்றோம் காத்திட வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் அரசரே இறைவா, உலகத்திலுள்ள அனைத்து நாட்டு தலைவர்கள் அனைவரும் அவரவர் நாட்டு மக்களின் நலன் கருதி அவர்களுக்காகவே உழைக்கின்ற நல் மனதை அளித்திட வேண்டி உம்மை மன்றாடுகின்றோம்.

## 28.8.2023 அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா நினைவு திருப்பலி

**முன்னுரை** திரு. ஜான் அலெக்ஸ்

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இன்று நாம் அருளாளர் செப்பரீனோ நமுங்க்குரா அவர்களின் விழாவை சிறப்பிக்கின்றோம். இவர் சலேசிய கல்விமுறைக்கு இன்னொரு சிறந்த உதாரணமாக திகழ்ந்தவர் என்றால் அது மிகையாகாது. புனித தோமினிக் சாவியோவை தன் முன்மாதிரியாக கொண்டு புனித நிலைக்கு உயர்ந்தவர் என்பது மட்டுமல்ல, செப்பரினோ அமைதியின் உருவமாக வாழ்ந்தார் என்பதற்கு பல குறிப்புகள் காணப்படுகிறது. தன் முதல் திருவிருந்து நாளுக்கு முன் தன்னோடு மனத்தாங்கல் கொண்டிருந்த ஒரு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்ட நிகழ்ச்சியை அவருடைய வரலாற்று பக்கங்கள் தெரிவிக்கிறது. இன்றைய நற்செய்தியில் சமயம் என்பது எப்படி இருக்க வேண்டும் - இருக்க கூடாது என்பதை இயேசு நமக்கு அறிவுறுத்துகிறார். சமயம் என்பது கடவுளுடனான உறவு மட்டுமல்ல மனிதர்களுடனான உறவும் கூட. ஆனால் சமயம் என்ற பெயரில் பரிசேயர்களும், சதுசேயர்களும் செய்த அக்கிரமங்களை இயேசு கடுமையாகச் சாடுகிறார்.

அதிகார வர்க்கத்தினர் சமயத்தை தங்கள் கைப்பாவையாக்கி மாற்றியிருந்த கண்ணோட்டத்தை இயேசு உடைக்கிறார். "அவர்கள் சொல்வதையெல்லாம் கடைப்பிடித்து வாருங்கள் ஆனால் அவர்கள் செய்வதுபோல் நீங்கள் செய்யாதீர்கள்" என்பதுதான் இயேசு இன்று தரும் அறிவுரை. ஒரே நேரத்தில் இயேசுவின் தீர்ப்பும், பரிந்துரையும் இதில் வெளிப்படுவதை நாம் பார்க்கலாம். எனவே கிறிஸ்துவே நம் சிறந்த வழிகாட்டி, அவரே வாழ்வும் வழியுமாய் இருக்கிறவர். அவர் வழி நடந்து நிலை வாழ்வு பெற முற்படுவோம். அன்பர்களே, நமது வாழ்வை திரும்பிப்பார்த்தால், நாமும் கூட பல வேளைகளில் கடவுளுக்கு எதிரான செயல்பாடுகளில் ஈடுபட்டிருப்பதை உணர முடியும். நம்மை அவர் பக்கம் திருப்புவதற்கு அவர் விடுத்த அழைப்பையும் உதறித்தள்ளியிருக்கிறோம். கடவுளுடைய அருள் நமக்கு கிடைக்கிறபோது, அதனைப் பற்றிப்பிடித்துக் கொள்ள தேவையான வரத்தைவேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நம்பிக்கையின் திருஉருவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் துறவிகளுக்காக மன்றாடுகிறோம். உள்ளமும் செயலும் நன்மையைக் கனியாக ஈந்தால்தான் முழுமையாக மனிதம் மலர்கிறது என்பதை அவர்களின் வாழ்வின்மூலம் நாங்கள் அறிந்து மனிதம் மலரும் இடத்தில் புனிதம் மணம்வீசும் என்பதற்கிணங்க எங்கள் வாழ்வை அமைத்துக்கொள்ள வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. நன்மையின் நாயகனே இறைவா, எம் உள்ளத்தில் வெறுப்பு, சுயநலம், அகங்காரம், கர்வம், செருக்கு மற்றும் பொறாமை எண்ணம் எரிந்துகொண்டிருக்கிறதை நாங்கள் உணர்ந்து வெள்ளையடித்த கல்லறைகளாக வாழ்வதை மாற்றிக்கொண்டு அகவாழ்வை சீர்தூக்கி நிலையான வாழ்வை நோக்கி வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. நேர்மையின் திருஉருவே இறைவா, எமது வாழ்வை உம்மிடம் அர்ப்பணிக்கிறோம். எம் வாழ்வில் உள்ள போலித்தனங்களையும், நெறிகேட்டையும் உம்மிடம் கையளிக்கிறோம். எம்மை மன்னித்து ஆசீர்வதியும். எம் உள்ளத்தை தூய்மையாக்கி, நேர்மையும் நன்னெறியும் நிறைந்தவர்களாய் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. நல்ல தலைவரான இறைவா, உம்மை போற்றுகிறோம். உமது அருள்வாக்கை ஏற்று, எங்கள் சொல்லுக்கும், வாழ்வுக்கும் இடைவெளி இல்லாதபடி வாழ்கிற ஆற்றலையும், ஞானத்தையும் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## 29.08.2023 புனித திருமுழுக்கு யோவானின் பாடுகள் திருப்பலி

**முன்னுரை**

திருமதி. ராணிசம்பந்தன்

மெசியாவின் வருகையை சீராக்க அவரின் பாதையை பண்படுத்த வந்த இறைத்தூதர் இவர். பழைய ஏற்பாட்டில் உண்மைக்கு உயிர் கொடுத்தார்கள் இறைவாக்கினர் பலர். அவ்வாறே பழைய புதிய ஏற்பாடுகளை இணைத்துத் தோன்றிய இறைவாக்கினர் யோவானும் உண்மைக்கும் நீதிக்கும் சாட்சி பகர்ந்து உயிர் நீத்தார். "நெருப்பினாலும் தூய ஆவியினாலும் மட்டுமே திருமுழுக்கு தர வருபவரின் முன்னோடி நான்" என்றார். நம்பிக்கையில் திளைக்கவும் அதில் நிலை நிற்கவும் விரும்பிய யாவரும் யோவானைப் பின் தொடர்ந்தனர். "வர இருப்பவர்" உங்கள் நடுவில் இருக்கிறார் என்று ஐயமின்றி எடுத்துரைத்தார். எனவே இவரிடம் செருக்கு சிறிதுமின்றி பாவம் போக்கும் செம்மறி வந்ததை உணர்ந்தவுடன் தம் சீடர்களிடம் "இதோ இறைவனின் செம்மறி" என்று சொல்லி அவர்களை இயேசுவிடம் அனுப்பிவிட்டு முற்றிலும் மறைந்து வாழ்ந்தார். இத்தகைய சான்றோரான யோவான் தம் உயிரைத் தியாகம் செய்யக்கூடிய சூழ்நிலை எப்படி வந்தது?

திருமுழுக்கு யோவான் குற்றவாளியைக் குற்றவாளி என்று சொல்லத் தயங்கவில்லை. உண்மையைக் கூரைமீதிருந்து, அறிவிக்கவும் அஞ்சவில்லை. உண்மையை மூடி மறைக்க வந்தவர் அல்ல, மேலும் தன் உயிரைக் காத்துக் கொள்ளவும் வரவில்லை. உயிரே பறிக்கப்படினும், எந்நாளும் உண்மையே வெல்லும் என்பதை யோவான் தான் அனுபவித்த பாடுகளின் வழியாக வாழ்ந்து சாட்சி பகர்ந்து உயிர் தந்தார். உடலைக் கொள்ளும் மனிதருக்கு அஞ்சாமல், ஆன்மாவைக் கொள்ளும் பாவத்திற்கு பயந்து, அப்பாவத்தை தவிர்க்கும் வல்லமையை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு**

1. முடிவில்லா ஜீவஒளியே இறைவா, உமது திருப்பணியைத் தொடரும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், அருட்கன்னியர்கள் மற்றும் திருநிலையினரான பொதுநிலையினர் அனைவரும் இயேசுவை முன்னுரைக்கும் பணியை செய்த புனித திருமுழுக்கு யோவானைப்போல தாழ்ச்சியும், நேர்மையும் கொண்டு வாழ அருள்புரியுமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. துணிவும் திடமும் அளிக்கும் இறைவா, இக்காலச் சூழலில் கண்முன்னே நடக்கும் தவறான செயல்பாடுகளை தட்டிக்கேட்கும் துணிவும், நெருக்கடிகளைச் சமாளிக்கும் திடத்தையும் எமக்களிக்க வேண்டுமென்று புனித திருமுழுக்கு யோவான் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான எம் இறைவா, திருஅவையின் ஓர் அங்கமான குடும்ப வாழ்வில் விரிசல்கள், சுயநலன்கள், பொறாமைகள், பிரிவினைகள், நீங்கி விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடும், பெருந்தன்மையோடும், ஒருவருக்கொருவர் அன்பு செய்யவும், அமைதியான உறவில் அனைவரும் வாழ உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: நம்பிக்கையில் வளர...

## விண்ணேற்பு அன்னை விடுதலையின் அன்னை

திரு. டே. ஆக்னல் ஜோஸ்

கத்தோலிக்கத் திருஅவை ஆகஸ்ட் 15ந்தேதி தூய கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழாவைச் சிறப்பிக்கிறது. இந்நாளிலேயே இந்திய நாடு தனது விடுதலையைக் கொண்டாடுவது நம்மை மகிழ்ச்சியில் ஆழ்த்துகிறது. விண்ணேற்பு என்பது விடுதலையின் ஓர் அடையாளம். அன்னை மரியா இவ்வுலக நெருக்கடிகளில் இருந்து விடுபட்டு, விண்ணகத்தில் கடவுளை முகமுகமாகக் காணச் செய்தது விண்ணேற்பு நிகழ்வே. ஆனால் இவ்வுலகிலேயே கடவுளின் ஆட்சியால்

சமூக விடுதலையை நிகழ்த்த விரும்பியவர் மரியா. இறைமகன் இயேசுவைத் தமது கருப்பையில் சுமக்கும் பேறுபெற்ற உடனேயே மரியா விடுதலையின் அன்னையாக மாறி விடுகின்றார். எலிசபெத் இல்லத்தில் அவர் பாடிய புகழ்ப்பா (லூக் 1:47-55) சமூக விடுதலைக்கான தாகத்தை வெளிப்படுத்துகிறது. கடவுளின் ஆட்சியில் இஸ்ரயேல் மக்களுக்கு என்ன நிகழ்ந்தது? உலக மக்கள் மீதான கடவுளின் தீர்ப்பு எப்படி இருக்கும்? என்பதை அவர் நினைத்து பார்க்கிறார். கடவுளின் இரக்கத்தைப் பெறுவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும்? எப்படிப்பட்ட மக்கள் அவரது தண்டனையைப் பெறுவர்? அவர் எத்தகைய மக்களை உயர்த்துவார்? யாரைத் தாழ்த்தி வீழ்த்துவார்? என்பது போன்ற பல்வேறு கேள்விகளுக்கு மரியாவின் புகழ்ப்பா அருமையான விடைகளைத் தருகின்றது.

அன்னை மரியாவின் பாடல் வரிகளில் காணப்படும் செய்திகள் எதிர்காலத்தைப்பற்றி பேசவில்லை. அவை நிகழ்காலத்தின் எதார்த்தங்களாக, கடவுளின் அரசு இம்மண்ணில் மலர்ந்து விட்டதன் அடையாளங்களாகத் தொனிக்கின்றன. ஆண்டவரின் இரக்கம் தலைமுறை தோறும் தொடர்கிறது, அவரது வல்லமையும் மாட்சியும் எப்போதும் வெளிப்பட்டுக் கொண்டே இருக்கின்றன. ஆகவே, "ஆண்டவரை எனது உள்ளம் போற்றிப் பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது" என்கிறார் மரியா. கடவுளின் விடுதலைப் பணி இவ்வுலகில் தொடர்ந்து நிகழ வேண்டும், செருக்குற்ற மக்கள் ஆண்டவர் முன்பாக நடுங்க வேண்டும் என்ற ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார். இந்த உணர்ச்சி மிகுந்த பாடல் மரியாவின் உள்ளத்தில் பிறக்க காரணம் என்ன? மீட்பரின் தாயாகும் வாய்ப்பை கடவுள் அவருக்கு அளித்துள்ளார். "அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இது முதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" என்ற மகிழ்ச்சி நிறைந்த மனநிலையில் அவரது புகழ்ப்பா எழுகிறது.

மனித குலத்தில் சாதாரணப் பெண்ணாகப் பிறந்த மரியா தம்மை கடவுளின் அடிமையாக எண்ணுகிறார். கடவுள் தம்மைக் கண்ணோக்கியதால் அந்த தாழ்நிலை நிலையற்ற ஒன்றாக மாறுகிறது. கடவுள் அவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டதால், எல்லா தலைமுறை மக்களும் தம்மைப் பேறுபெற்றவராகக் கொண்டாடுவர் என்பதை மரியா உணர்கிறார். மரியாவின் வாழ்வு பல்வேறு சங்கடங்களும் சவால்களும் நிறைந்ததாக இருந்தது. அவர் கடவுளின் திட்டத்திற்கு இசைவு அளித்த கணத்தில் இருந்தே பலவித பிரச்சனைகளும் போராட்டங்களும் தொடர்ந்து கொண்டிருந்தன. இருந்தாலும், கடவுளின் இரக்கத்தையும் மீட்புத் திட்டத்தையும் நினைத்து, "மூதாதையருக்கு உரைத்தபடியே, அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழிமரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு

நினைவில் கொண்டுள்ளார்” என்று பாடுகிறார். மனிதகுலத்தின் சமூக மற்றும் ஆன்மிக விடுதலையை இலக்காக வைத்து மீட்பரின் தாயாக இணங்கி, அதனால் விளைந்த துன்பங்களை வாழ்வில் ஏற்றுக் கொண்டார்.

“வல்லவராம் கடவுள் எனக்கு அரும்பெரும் செயல்கள் செய்துள்ளார். தூயவர் என்பதே அவரது பெயர்” என்ற வரிகள் அன்னை மரியாவின் மேன்மையைக் காட்டுகின்றன. ஆம், மரியாவின் வாழ்வே கடவுளின் அரும்பெரும் செயல்களால் நிறைந்துள்ளது என்று கூறினால் அது மிகையாகாது. மரியா தமது தாயின் வயிற்றில் கருவான பொழுதே தொடக்கப் பாவத்தின் கறைகளில் இருந்து பாதுகாக்கப்பட்டார். அவர் கன்னியாக இருந்த பொழுதே கடவுளின் மகனைத் தமது கருப்பையில் சுமந்து பெற்றெடுக்கும் தாயாகப் பேறுபெற்றார். கடவுளின் அன்னை எனும் பட்டத்தோடு விண்ணக மாட்சியைப் பெற்றார். மீட்பரின் தாயாக விளங்கும் மரியா விடுதலையின் அன்னையாகவும் திகழ்கின்றார். உயர்வு தாழ்வற்ற, பசியற்ற, ஒடுக்குமுறையற்ற, செருக்கற்ற, நலன்களால் நிறைந்த ஒரு விடுதலைச் சமூகத்தை மரியா கனவு கண்டார். தன்னாட்சி கொண்ட ஒவ்வொரு நாடும் இத்தகைய நீதியுள்ள சமூகத்தை உருவாக்க கடமைப்பட்டுள்ளது. ஆண்டவர் இயேசுவின் வழியில், அன்பு, நீதி, நேர்மை, உண்மை கொண்ட இறையாட்சி சமூகத்தை கட்டியெழுப்ப வேண்டும். நமது நாட்டின் விடுதலையைச் சிறப்பிக்கும் இந்நாளில், அன்னை மரியா கனவு கண்ட விடுதலை சமூகம் உருவாகி இறையாட்சி மலர உழைப்போம்.

## புனித பர்த்தலமேயு திருத்தூதர் வாழ்வை அறிவோம்

திரு. பி. விக்டர்

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருத்தூதர்களில் ஒருவரான புனித பர்த்தலமேயுவின் பெருவிழாவை இம்மாதம் நம் திருஅவை சிறப்பிக்கிறது. ஒத்தமைவு நற்செய்திகளான மத்தேயு, மாற்கு, லூக்கா நற்செய்திகளில் இவரது பெயர் பர்த்தலமேயு என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் யோவான் நற்செய்தியில் மட்டும் இவரது பெயர் “நத்தனியேல்” என்று குறிப்பிடப்பட்டுள்ளது. பர்த்தலமேயு என்பது இவரது பெயரல்ல, மாறாக அது இவரது குடும்பப் பெயராகும். அதாவது “டொல்மாயின் மகன்” (Tolmai) என்று பொருள் கொள்ளும் வார்த்தைதான் பர்த்தலமேயு என்பது மறைநூல் ஆராய்ச்சியாளர்களின் கருத்தாகும். இவர்களின் கூற்றுப்படி இவரது பெயர் “நத்தனியேல்” என்பதாகும். அதைத்தான் யோவான் தனது நற்செய்தியில் குறிப்பிட்டுள்ளார். பேதுரு, அந்திரேயா, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை தனது திருப்பணிக்கு அழைத்த இயேசு அடுத்து பிலிப்புவைக்கண்டு அவரையும் அழைக்கிறார் (யோவான் 1: 43). இந்த பிலிப்பு தனது நண்பரான பர்த்தலமேயு என்கிற நத்தனியேலைப் பார்த்து “மெசியாவைக் கண்டோம்” என்று கூற பதிலுக்கு நத்தனியேல் அது யார்? என்று வினவினார். அதற்குப் பதிலளித்த பிலப்பு, நாசரேத்து

ஊரைச் சேர்ந்த யோசேப்பின் மகன் "இயேசுவே" அவர், என்றார். அதற்கு நத்தனியேல் "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வர முடியுமோ" என்று கேட்டார். அதற்கு பிலிப்பு "வந்து பாரும்" என்று கூறி நத்தனியேல் இயேசுவிடம் அழைத்து வந்தார் (யோவான் 1:46).

நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ? என்கிற கேள்விக்கு ஒரு வரலாற்றுப் நிகழ்வு உண்டு, நாசரேத்து என்பது "கலிலேயா" நாட்டிலுள்ள ஒரு பகுதி. இந்த கலிலேயா நாட்டில் பகுதிகள் முற்காலத்தில் அதாவது யோசுவாவின் காலத்தில் "அடைக்கலப் பட்டணமாக" தெரிந்து கொள்ளப்பட்ட பகுதியாகும். யாராவது தவறுதலாகவோ, தெரிந்து ஒரு கொலையைச் செய்து விட்டு அந்தச் கொலைக் குற்றத்திலிருந்து தப்பிக்க இந்த அடைக்கலப் பட்டணத்திற்குள் நுழைந்து விட்டால் அவரை கொலை செய்யக்கூடாது என்பது கடவுள் மோசே மூலமாக இஸ்ரயேல் மக்களுக்குக் கொடுத்த சட்டப்பாதுகாப்பு (எண் 35:11-14) இந்த கட்டளைக்கேற்ப "யோசுவா" இஸ்ரயேல் மக்களுக்கு கானான் நாட்டைப் பிரித்துக் கொடுக்கையில் யோர்தான் நதிக்கு அப்புறம் மூன்று நகர்களையும், அடைக்கலப் பட்டணமாக அறிவித்தார் (யோசுவா 21,32,20:7). அவற்றுள் ஒன்றுதான் கலிலேயாவைச் சேர்ந்த பகுதிகள் அதனால் அந்நாட்களில் அநேகக் குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்கள் இப்பகுதிகளில் வந்து குடியேறினார்கள். இதை யூதமக்கள் அனைவரும் நன்கறிவர். இதனையறிந்த நத்தனியேல் "நாசரேத்திலிருந்து நல்லது எதுவும் வரமுடியுமோ" என்று பிலிப்புவிடம் வினவினார். இயேசு மட்டுமல்ல, இயேசுவின் பன்னிரெண்டு திருத்தூதர்கள் யாவருமே இந்த கலிலேயாவைச் சேர்ந்தவர்களாவர்.

பிலிப்பு அழைத்து வந்த நத்தனியேலைப் பார்த்த இயேசு "இவர் உண்மையான இஸ்ரயேலர் கபடற்றவர்" என்று அவரைக் குறித்து கூறினார் (யோவான் 1:47). திருவிவிலியத்தில் இயேசு சிலரைத்தான் மனமுவந்து பாராட்டியுள்ளார். "மனிதர்களாய் பிறந்தவர்களில் திருமுழுக்கு யோவானைக் காட்டிலும் பெரியவர் எவருமில்லை" என்று திருமுழுக்கு யோவானை இயேசு பாராட்டினார். அடுத்து ஒரு நூற்றுவத்தலைவன் தனது பணியாளனுக்காக இயேசுவிடம் வந்து "நீர் என் இல்லத்திற்கு வர நான் தகுதியற்றவன், ஆனால் ஒரு வார்த்தை மாத்திரம் சொல்லும் என் பணியாளன் சுகமாவான்" என்று வேண்டினான். அவனது உறுதியான நம்பிக்கையைக் கண்ட இயேசு வியந்து தன்னைப் பின்பற்றி வந்த மக்களைப் பார்த்து, "இஸ்ரலேயரிடத்தில் கூட இத்தகைய நம்பிக்கையை நான் பார்க்கவில்லை" என்று கூறி அவன் கேட்டுக்கொண்டபடி அவனது பணியாளனுக்கு சுகம் தந்தார் (மத்.8:8). இவ்வாறு இயேசு பாராட்டியவர்களில் பர்த்தலமேயு என்கிற நத்தனியேலும் ஒருவர். "இயேசு கடவுளின் மகனாகிய மெசியா" என்பதை அறிந்து அதை அறிவித்ததாலேயே இயேசு இவ்வாறு அவரை பாராட்டினார் (யோவான் 1:49).

இந்த பர்த்தலமேயுவும் பிலிப்பும் நண்பர்களாக இருந்திருக்க வேண்டும். அதனால்தான் இயேசு தன்னை அழைத்தவுடன் பிலிப்பு அச்செய்தியை பர்த்தலமேயுவிடம் அறிவிக்கிறார். அவரையும் அழைத்து இயேசுவிடம் அறிமுகப்படுத்துகிறார். பின்னர் அவரும் திருத் தூதராகின்றார். அதனாலேயே மத்தேயு நற்செய்தி 10:3லும், மாற்கு நற்செய்தி 3:18ம், லூக்கா நற்செய்தி 6:14லும் உள்ள திருத்தூதர்களின் பெயர் பட்டியலில் பிலிப்புவின் பெயரும் பர்த்தலமேயுவின் பெயரும் இணைந்தே காணப்படுகிறது. இவர்கள் இருவரும் இணைந்து நற்செய்தி அறிவித்து அதன் காரணமாக துன்பங்களை அனுபவித்ததாக பாரம்பரிய செய்தி கூறுகிறது. ஆனால் இக்கூற்றை விவிலிய ஆராய்ச்சியாளர்கள் சரியான ஆதாரங்கள் இல்லாததால் ஏற்றுக்கொள்ளவில்லை.

பர்த்தலமேயு என்கிற நத்தனியேல் இயேசுவின் விண்ணேற்பிற்கு பிறகு தூய ஆவியானவர் திருத்தூதர்களை ஆட்கொண்ட திருப்பொழிவின் நேரத்தில் மற்ற சீடர்களோடு இருந்தார் என்பதற்கான ஆதாரங்கள் திருவிவிலியத்தில் உள்ளது (எண் 1:13). தூய ஆவியின் திருப்பொழிவிற்குப் பிறகு எருசலேம் நகரில் உள்ள கிறிஸ்தவர்களுக்கு வேதனையும் துன்பங்களும் உண்டானபோது திருத்தூதர்கள் பலரும் மற்ற ஊர்களுக்கும் சென்றனர். சென்றவிடங்களில் எல்லாம் நற்செய்தியை அறிவித்து திருமுழுக்கு வழங்கி வந்தனர் (எண். 8:4) அவ்வாறு எருசலேமை விட்டு வெளியேறியவர்களில் ஒருவரான தூய தோமா பல நாடுகளைக் கடந்து இந்தியா வந்ததையும் அதிலும் குறிப்பாக தமிழகம் வந்ததையும் நாம் அறிவோம். பர்த்தலமேயு அவர்களும் எருலேமைவிட்டுப் புறப்பட்டு ஆசியா, சின்ன ஆர்மீனியா, பெரிய ஆர்மீனியா, இன்றைய துருக்கி, இந்தியாவின் வடமேற்கு பகுதிகளில் நற்செய்தி அறிவித்ததாக திருமுறை வரலாற்று ஆராய்ச்சியாளர்களும் ஏற்றுக்கொள்கின்றனர். அவர் இறுதியில் நற்செய்தி அறிவித்த நாடு சின்ன ஆர்மீனியா ஆகும். ஆர்மீனியா நாட்டை ஆண்ட மன்னனுக்கு இவர் நற்செய்தி அறிவித்தார். நற்செய்தியை நம்பிய அரசன் கிறிஸ்துவத்தைத் தழுவி திருமுழுக்குப் பெற்றார். அரசன் மனம்மாறி கிறிஸ்தவரானார் என்பதை அறிந்து அரசனது இளைய சகோதரன் அஸ்டியாஜஸ் (ASTYSGES) பர்த்தலமேயுவை சித்தரவதைச் செய்து கொலைசெய்ய ஆணையிடுகிறான். அவரது மரணம் குறித்து மூன்று வித செய்திகள் உலா வருகின்றன.

1. பர்த்தலமேயுவை கடலுக்குள் கடத்திச் சென்று தண்ணீரில் மூழ்கடித்து, கொலை செய்ததாக கூறப்படுகிறது.
2. பர்த்தலமேயுவை தலைகீழாக சிலுவையில் அறைந்து கொலை செய்ததாகக் கூறப்படுகிறது.
3. பர்த்தலமேயு உயிருடன் இருக்கும்பொழுதே அவரது மேல்தோலை உரித்து எடுத்ததாகவும் பின்னர் அவரது தலையை வெட்டியதாகவும்

அவரது உடலைத் தீயிட்டு எரித்து கொலை செய்ததாகவும் நம்பப்படுகிறது.

இந்த மூன்றாவது தகவலான புனிதர் உயிருடன் இருக்கும்போதே அவரது மேல்தோல் உரிக்கப்பட்டு தலை வெட்டப்பட்டு தீயில் எரிக்கப்பட்ட செய்தியை நமது திருமறை ஆராய்ச்சியாளர்களும் வரலாற்று அடிப்படையில்தான் உரோமையில் உள்ள சிஸ்டைன் (Sistine) தேவாலயத்தில், உலகப் புகழ்பெற்ற சிற்பியும் ஓவியருமான மைக்கில் ஆஞ்சலோ அவர்கள் "கடைசி நீதி தீர்ப்பு" என்கிற தலைப்பில் ஒரு ஓவியத்தை வரைந்து வைத்துள்ளார். இறுதித் தீர்வை குறித்த அந்த ஓவியத்தில் புனித பர்த்தலமேயு அவர்கள் தன் கையில் தனது மேல்தோல் வைத்திருப்பதுபோன்று வரையப்பட்டுள்ளது. இன்றைக்கும் நாம் பார்த்து வியக்கும் ஓவியங்களில் இந்த ஓவியமும் ஒன்றாகும்.

திருத்தூதர் பர்த்தலமேயு என்கிற நத்தனியேல் கிறிஸ்துவுக்குப் பிறகு கி.பி. 71ம் ஆண்டு இறந்திருக்க வேண்டுமென்று அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இவரது நினைவு திருவிழாவை ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்டு மாதம் 24ம் நாளில் நமது திருஅவை கொண்டாடி மகிழ்கிறது. திருத்தூதர் பர்த்தலமேயுவின் வாழ்வை அறிந்த நாம் நம்மிடம் கொடுக்கப்பட்டுள்ள இந்த நற்செய்தி பணிக்காக என்ன செய்துள்ளோம்? சிந்திப்போம். நற்செய்திப் பணியை வாய்ப்புகள் இருக்கும் பொழுதெல்லாம் செய்வோம், நற்செய்திப் பணிக்காக நம்மால் இயன்ற பொருளுதவி அல்லது உடல் உதவிகளைச் செய்வோம். நற்செய்தி பணியாற்றும் உண்மையான பணியாளர்களுக்காக இறைவனிடம் மன்றாடுவோம். இவற்றை செய்து நாமும் நற்செய்தியாளர்களாக மாறுவோம், புனித பர்த்தலமேயுவின் வாழ்வும் அவரது பணியும் நமக்குத் தூண்டுதலாக அமையட்டும்.

## அருளாளர் செப்பரினோ நமுங்க்குரா வாழ்வு நமக்கு தரும் பாடம்

திரு. ஜான் அலெக்ஸ்

**பம்பாஸ் மாகாணம் :** லத்தீன் அமெரிக்க நாடுகளுள் ஒன்றான அர்ஜென்டினாவின் தென் மத்தியப் பகுதியில் உள்ளது பம்பாஸ் மாகாணம். கருப்பினத்தவரும் பூர்வ குடிகளும் வாழ்ந்த பல்வேறு லத்தீன் அமெரிக்கப் பகுதிகள் ஐரோப்பிய நாடுகளின் காலணியாக்கும் வெறியினால் அடிமைகளாக்கப்பட்டுக் கொண்டிருந்தனர். அதாவது ஆங்கிலோ - இந்திய காலணிகள் போன்று அர்ஜென்டீனா-ஸ்பெயினின் காலணியாகிக் கொண்டிருந்தது.

1870களில் ஏறக்குறைய அர்ஜென்டினாவின் எல்லா குருநிலங்களும் நசுக்கப்பட்ட நிலையில் பம்பாஸின் தென் மத்திய பகுதியில் வாழ்ந்து வந்த அரோக்கன் பழங்குடியினரின் தலைவராயிருந்து மக்களுக்காக சண்டையிட்டு வாழ்வுரிமைக்காக போராடிய அந்த அரோக்கன்

பழங்குடியினரின் தலைவராயிருந்த மனுவேல் நமுங்க்குரா - ரொசாரியா தம்பதியின் ஆறாவது மகனாக பிறந்தவரே செப்பரினோ நமுங்க்குரா.

**பழங்குடியில் புனிதத்தின் முன்னோடி :** மொராலெஸ் நமுங்க்குரா என்று பெயரிடப்பட்டவர் பின்நாளில் "மொராலெஸ்" என்பதை செப்பரினோ என்று பெயர் மாற்றப்பட்டவர், ஒரு பழங்குடியினரின் குடும்பத்தில் பிறந்தவர் என்றாலும் பிற்காலத்தில் ஒரு புனிதத்தின் முன்னோடியாய் திகழ்வான் என்பதற்கு சான்றாய் அமைந்தது அவருடைய குழந்தைப் பருவம். தன் மூதாதையர், தன் பின்புலம் பற்றி அறிந்திருந்த செப்பரினோ தானும் ஒரு போர் வீரனாய் உருவெடுப்பதையே விருப்பினார். அதுமட்டுமல்ல தன் இனத்தவரின் எதிர்கால வித்தாக திகழப்போகிறவர் என்ற பெருமையை பெற்றவர்.

**கல்லெறிய குலுங்கியது கடல் :** செப்பரினோ 1897ல், தனது தந்தையால் புவோன்ஸ் ஏர்ஸில் இராணுவப் பள்ளியில் சேர்க்கப்பட்டார். தொடக்கமுதலே அதை விரும்பாத செப்பரினோவின் மனது வேறெதையோ நாடியவாறு காணப்பட்டது. இதை நன்கு புரிந்துகொண்ட செப்பரினோவின் தந்தை மனுவேல், அவரை அதே பகுதியில் உள்ள சலேசிய பள்ளி ஒன்றில் சேர்த்தார். அன்பும், அரவணைப்பும், புரிதலும் முழுமையாய் இருந்த அந்த சலேசிய பள்ளி செப்பரினோவுக்கு எல்லையில்லா மகிழ்ச்சியையும் அருளையும் வாரி வழங்கியது.

**பழங்குடி வாழ்வு - சலேசிய பாணி :** அடிப்படையில் இவர் பக்தி முயற்சிகள், மறைக்கல்வி, அருளடையாங்கள், நற்கருணை பக்தி, செப ஆர்வம் போன்றவற்றில் நாட்டம் உள்ளவராய் இருப்பதை சலேசிய பள்ளியில் இருந்த சலேசியர்கள் கண்டுகொண்டனர். வரிசையில் நிற்பது, சில கட்டுப்பாடுகளோடு வாழ்வது, சக மாணவர்களிடம் ஒத்து வாழ்வது... போன்றவை சுதந்திரமான பழங்குடி வாழ்க்கையில் வளர்ந்த செப்பரினோவுக்கு இவையெல்லாம் முதலில் நடைமுறைக்கு ஒவ்வாதவையாக தோன்றினாலும் காலப்போக்கில் இவற்றை ஏற்று பிற மாணவர்களுக்கு முன்மாதிரியாகப் பேசப்படும் அளவிற்கு தனது வாழ்வை வளர்த்துக்கொண்டார்.

**அமைதியின் உருவம் :** செப்பரினோ அமைதியின் உருவமாக வாழ்ந்தார் என்பதற்கு பல குறிப்புகள் காணப்படுகிறது. தன் முதல் திருவிருந்து நாளுக்கு முன் தன்னோடு மனத்தாங்கல் கொண்டிருந்த ஒரு மாணவனிடம் சென்று மன்னிப்புக் கேட்ட நிகழ்ச்சியை அவருடைய வரலாற்று பக்கங்கள் தெரிவிக்கிறது. அதுமட்டுமல்ல பலமுறை, மாணவர்களிடையே சண்டை வந்தபோது செப்பரினோவின் நடுநிலையான ஆலோசனையினால், தீர்வுகள் காணப்பட்டன என்பதை அவருடைய நண்பர்கள் குறிப்பிட்டுள்ளதை பார்க்க முடிகிறது.

**தீர்க்கமான பக்தி-அசாத்தியமான சுயக்கட்டுபாடு:** மாணவர்கள் ஒவ்வொரு நாளும் குழுவாக சிலுவைப்பாதை செய்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். செப்பரினோவின் தலைமையில் உள்ள குழுவில் மட்டும் எப்போதுமே எண்ணிக்கை அதிகமாக இருந்தது. இதற்கு செப்பரினோவிடம் காணப்பட்ட பக்தியே என்பது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. இதுவே பல இளையோரை இவரின் பக்கம் ஈர்த்தது. செப்பரினோவின் ஆசிரியராகவும், பொறுப்பாளர்களாகவும் பணியாற்றியவர்கள், தனக்கென ஒரு வாழ்வு முறையை வகுத்துக்கொண்டு அதன்படி வாழ்ந்து வருகிற அசாத்தியமான கட்டுப்பாடு இருந்ததாக குறிப்பிட்டுள்ளனர். மறைக்கல்வி என்றாலும் மரியன்னையின் பக்தி என்றாலும் இவரே முதன்மையாக இருந்தார்.

**சலேசியப் பணியில் முளைத்த அழைப்பு :** மரியன்னையின் படம் ஒன்றும் தோமினிக் சாவியோவின் படம் ஒன்றும் எப்போதுமே தன் மேசையின்மீது வைத்திருப்பார். சலேசிய ஆயராக இருந்த பேரருட்திரு கலியேரோ அவர்களையும் தன் பகுதியில் பணிபுரிந்த சலேசிய குரு அருட்திரு.மிலனேசியோ அவர்களையும் பார்த்துத் தானும் சலேசிய குருவாக வேண்டும் என்று முடிவெடுத்தார். தன் பழங்குடி மக்களுக்கு இறைப்பணி செய்து நற்செய்தி அறிவிக்க வேண்டும் என்றத் தணியாத்தாகம் அவரில் ஊற்றெடுத்தது. நான்கு வருடங்கள் படித்து முடித்தவர் உடல் நலம் குன்றியது. இதனால் தன் சொந்த பகுதியிலேயே தன் குருத்துவ கல்வியைத் தொடர அனுப்பி வைக்கப்பட்டார். மெல்ல இவரை தாக்கிக் கொண்டிருந்த காசநோயின் காரணமாக இத்தாலிக்கு அனுப்பப்பட்டார்.

**இன்னுமொரு தோமினிக் சாவியோ :** செப்பரினோவின் உடல்நிலை நாளுக்கு நாள் மோசமடைந்து வந்தது. பல அன்பு மாணவர்கள், அன்பு உள்ளங்கள் சூழ்ந்து நிற்க தன் ஆன்மாவை இறைப்பதம் கையளித்தார் செப்பரினோ. சலேசிய பள்ளியில் நுழைந்த நாள் முதலே தோமினிக் சாவியோவின் வாழ்வை அறிந்து தெளிந்து அவரையே தன் வாழ்வின் முன்மாதிரியாய்க் கொண்டு வாழ்ந்தவர் செப்பரீனோ. இவரின் வாழ்க்கை முறையை கண்டு பலரும் "புனித அலோசியஸ் ஞானப்பிரகாசியார் மீண்டும் உயிர்பெற்று வந்ததுபோன்று உள்ளது" என்றும் "இன்னுமொரு தோமினிக் சாவியோ" என்றும் பேசினார்கள்.

தோமினிக் சாவியோ 15 வயதுகூட நிரம்பாத சிறுவன். அவன் எப்படி இளையோர்களுக்கு முன்மாதிரியாய் இருக்கமுடியும் என்று தவறான காரணம் கற்பிக்கும் சிலருக்கு செப்பரினோவின் வாழ்வு ஒரு சவால், ஒரு சவுக்கடி. தோமினிக் சாவியோவை தன் முன் மாதிரியாய் கொண்டது மட்டுமல்ல, தானே ஒரு மாபெரும் முன்மாதிரியாய் வாழ்ந்து 19வயதிலும் இறைவனுக்கேற்ற வாழ்வு வாழ முடியும் என்று காட்டியுள்ள செப்பரினோ

நமுங்க்குராவிற்கு திருஅவை அருளாளர் நிலையை வழங்கியுள்ளது. கத்தோலிக்க இளையோர்களின் வாழ்வுக்கு ஒரு அரும்பெரும் இன்னுமொரு முன்மாதிரி கிடைத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

## திருஅவைச் செய்திகள்

சகோ. சூசைராஜ், ச.ச.

### திருத்தந்தைக் கூறும் குடிபெயரும் மக்கள்

திருத்தந்தையின் லாம்த்பதூசா திருத்தூதுப் பயண பத்தாமாண்டு நிறைவு கடலில் காணாமல் போன குடிபெயர்ந்தோர் மற்றும் புலம் பெயர்ந்தோருக்காக செபிப்பதற்காக இத்தாலிய தீவான லாம்பதுசாவிற்கு திருத்தந்தை பிரான்சிஸ் தனது திருத்தூதுப் பயணத்தைத் தொடங்கி ஜூலை 8 சனிக்கிழமையுடன் பத்தாண்டு நிறைவடைகின்றது. தெற்கு இத்தாலிப் பகுதியான சிசிலி கடற்கரைப் பகுதியானது மத்திய கிழக்குப் பகுதிகள், ஆசியா, ஆப்ரிக்கா குறிப்பாக லிபிய கடற்கரைப் பகுதிகளிலிருந்து ஐரோப்பாவிற்குள் நுழைய விரும்பும் மக்கள் குடிபெயரும் பகுதியாகத் திகழ்கின்றது. உலகமயமாக்களின் அலட்சியத்தன்மை நம்மைப்பற்றி மட்டுமே சிந்திக்கக் கூடியவர்களாகவும், மற்றவர்களின் அழுகையைக் கண்டு உணர்வற்றவர்களாகவும் நம்மை மாற்றுகின்றது என்று திருத்தந்தை கண்டித்ததை நினைவுகூறும் லாம்பதுசா கடல்சார் பணியாளர்கள், “உமது சகோதரன் எங்கே? அவருடைய இரத்தம் என்னை நோக்கிக் கூக்குரலிடுகிறது” என்று ஆண்டவர் காயீனை நோக்கிக் கேட்ட கேள்வி இன்று நம் ஒவ்வொருவரிடமும் கேட்கப்பட்ட கேள்வி என்ற திருத்தந்தையின் மறையுரை வரிகளையும் எடுத்துரைத்துள்ளனர்.

கடினமான சூழ்நிலைகளில் இருந்து சிறிது அமைதியையும் தங்கள் குடும்பங்கள் வாழ்வதற்கு ஒரு சிறந்த இடத்தைத் தேடிக்கொண்டிருந்த அவர்கள் மரணத்தைக் கண்டார்கள் என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் லிபியா மற்றும் துனிசியாவை இத்தாலியுடன் இணைக்கும் ஐரோப்பாவிற்கான மத்திய தரைக்கடல் இடம் பெயர்வு பாதையில் IOM எனப்படும், இடம் பெயர்வுக்கான பன்னாட்டு அமைப்பு 2014 முதல் 17 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்ததாகவும் காணாமல் போனதாகவும் பதிவு செய்துள்ளது. 2023ம் ஆண்டு ஜூன் 14 அன்று மத்திய தரைக்கடலில் 750 பயணிகளை ஏற்றிச் சென்ற மீன்பிடி இழுவை படகு கிரேக்க கடற்கரையில் கவிழ்ந்து பலர் இறந்தனர் மற்றும் நூற்றுக்கணக்கானவர்கள் இன்று வரை கண்டுபிடிக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

### புலம்பெயர்ந்தோர் நமது அன்பிற்கு தகுதியானவர்கள்

புலம் பெயர்ந்து நம் இல்லத்தின் கதவுகளைத் தட்டும் சகோதரர்கள்

நமது அன்புக்கும், ஏற்றுக்கொள்ளுதலுக்கும் தகுதியானவர்கள் என்றும், அவர்களும் நம்மைப் போலவே பூமியில் உள்ளதை அனுபவிக்கும் உரிமை பெற்றவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஜூலை 8 சனிக்கிழமை லாம்பதுசா திருத்தூதுப் பயணத்தின் பத்தாமாண்டு நிறைவையொட்டி Agrigento மறைமாவட்ட பேராயர் Alessandro Damiano அவர்களுக்கு அனுப்பியுள்ள செய்தியில் இவ்வாறு குறிப்பிட்டுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புலம்பெயர்ந்த சகோதர சகோதரிகளிடத்தில் ஒருமைப்பாடு, பகிர்வு ஆகியவற்றைக் காட்டவும், அவர்களுடனான புதுப்பிக்கப்பட்ட மற்றும் ஆழமான உறவின் பொறுப்புணர்விற்கு நாம் அனைவரும் அழைக்கப்பட்டுள்ளோம் என்றும் எடுத்துரைத்துள்ளார்.

## உரோமை உயர்குருமட தலைவராக ஆயர் Michele Di Tolve

உரோமை மறைமாவட்ட குருமாணவர்களின் உருவாக்கம் மற்றும் செயல்பாடுகளுக்காக உரோமை திருத்தந்தை உயர்குருமட தலைவராக ஆயர் Michele Di Tolve அவர்களை நியமித்துள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஜூலை 5 புதன்கிழமை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் வெளியிட்ட இந்த நியமனத்தின்படி ஆயர் Michele Di Tolve அவர்கள், குருமாணவர்களின் உருவாக்கம் மற்றும் அவர்களின் செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் பணிகளுக்கிடையிலான உறவை வலுப்படுத்தும் பணியினைச் செய்வார்.

## 16வது உலக ஆயர்கள் மாமன்றத்தில் பங்கேற்போர்

உலகமெங்கும் உள்ள ஆயர்கள் ஒன்றாக இணைந்து திருத்தந்தையின் தலைமையின்கீழ் திருஅவை செயல்பாடுகளை சீர்த்தூக்கிப் பார்க்கும் வகையில் அக்டோபர் மாதம் நடைபெற உள்ள உலக ஆயர்கள் மாமன்றத்தின் முதல் தொடரில் பங்கேற்போர் பற்றிய பெயர்ப்பட்டியலானது வெளியிடப் பட்டுள்ளது. ஜூலை 7 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட இப்பெயர்ப்பட்டியலின்படி உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைவராக திருத்தந்தை பிரான்சிஸ், மற்றும் செயலராக கர்தினால் மாரியோ கிரேக் அவர்களின் பெயர்கள் இடம் பெற்றுள்ள பட்டியலில் இந்திய ஆயர் பிரதிநிதிகள் நால்வரின் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

கோவா மற்றும் டாமன் உயர்மறைமாவட்ட பேராயர் கர்தினால் பிலிப்பு நேரி பெராவோ, சென்னை மயிலை உயர் மறைமாவட்டப் பேராயர் ஜார்ஜ் அந்தோணிசாமி, கண்ணூர் ஆயர் அலெக்ஸ் ஜோசப் வடகும்தலா, ஐதராபாத் உயர் மறைமாவட்ட பேராயர் கர்தினால் அந்தோணியோ பூலா ஆகியோர் உலக ஆயர்கள் மாமன்றத்தில் இந்திய ஆயர் பிரதிநிதிகளாகப் பங்கேற்க உள்ளனர்.

## சுடர் வாசகர் போட்டி 100 சரியான விடைகள்

1. குழந்தை இயேசுவின் புனித தெரேசா
2. 1. புனிதர்களின் வரலாறு 2. இயேசுவின் வாழ்க்கை வரலாறு
3. தயாரிக்கிறார்
4. புனித யாக்கோபு
5. அருளாளர் மரிய ரொமேரோ
6. "பாவம் செய்யாதே, நரகம் செல்வாய்"
7. புனித தோமையார்
8. அருளாளர் ரொமேரோ உருவாக்கிய வீட்டுவசதி திட்டத்தின் பெயர்
9. திருத்தந்தை 16ம் பெனடிக்டால், புனித அல்போன்சாவுக்கு கொடுக்கப்பட்டது.
10. ஏரோது மன்னன் அக்கிரிப்பாவால் தலைவெட்டப்பட்டு கொல்லப்பட்டார்
11. யாக்கோபு 3 : 18
12. புனித மகதலா மரியா
13. 12ம் பத்திநாதர்
14. 1977, ஜுலை 7
15. சின்னமலை

### குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

A. Antonysamy, Salem

Sr. Fatima FMA, Vellore

A. George Stephen, Villupuram

## சுடர் வாசகர் போட்டி - 101

1. இக்விடாரில் உள்ள சுகார் மக்களிடையே பணிபுரிந்த அருட்சகோதரி யார்?
2. "டொல்மாயின் மகன்" என்றால் யார்?
3. அருளாளர் செப்பரினோ நமுங்க்குராவின் பெற்றோர் யார்?
4. புனித பர்த்தலமேயு எங்கே எப்படி மரித்தார்?
5. "கன்னிமைக் குன்றா அரசி" என புகழ்ந்தவர் யார்?
6. நம் நாடு எத்தனையாவது சுதந்திர தினத்தை கொண்டாடுகின்றது?
7. லிபேரியன் ஆலயத்தை புதுப்பித்தவர் யார்?
8. அருளாளர் அகஸ்துஸ் சர்தோரிஸ்கியின் பெற்றோர் பெயர் என்ன?
9. "இன்னும் ஒரு டோமினிக் சாவியோ" என்று யாரை அழைத்தனர்?
10. "இதோ இறைவனின் செம்மறி" என்று இயேசுவை சுட்டிக்காட்டியவர் யார்?
11. புனித பர்த்தலமேயுவின் பழைய பெயர் என்ன?
12. 1948ல் திருத்தந்தை 12ம் பத்திநாதர் அறிவித்த நம்பிக்கை அறிக்கை என்ன?
13. ரீநார்மண்டி என்னுமிடத்தில் பிறந்த புனிதர் யார்?
14. மேகத்தையும், தந்தை இறைவனையும் ஆசிரியர் என்னவென்று ஒப்பிடுகிறார்?
15. புனித மரிய வியான்னி பணி செய்ய அனுப்பப்பட்ட கிராமத்தின் பெயர் என்ன?

**தீபகச் சுடர்**

**அன்பு வாசகர்களே!**

மாதம் தவறாமல் ஒரு பிரதியைப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரைப் பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
தொலைப்பேசி: 044 - 26428162.

பெயர்:....................................
முகவரி:..................................
..........................................
..........................................
..........................................

## அடுத்த சுடரில்

### பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

பொதுக்காலம் 22ம் ஞாயிறு
கொல்கொத்தா நகர்ப் புனித தெரேசா
புனித கன்னி மரியாவினுடைய பிறப்பு விழா
பொதுக்காலம் 23ம் ஞாயிறு
புனித மரியாவின் தூய்மைமிகு பெயர்
திருச்சிலுவையின் மாட்சி விழா
புனித மரியாவின் துயரங்கள்
புனித கொர்னேலியுஸ்
பொதுக்காலம் 24ம் ஞாயிறு
புனித மத்தியா, திருத்தூதர் நற்செய்தியாளர் விழா
அருளாளர் ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்கள்
பொதுக்காலம் 25ம் ஞாயிறு
புனித வின்சென்ட் தே பால்
புனிதர்கள் மிக்கேல், கபிரியேல், ரபேல் விழா
புனித ஜெரோம்

### பகுதி 2: நம்பிக்கையில் வளர...

கன்னி மரியாவின் பிறப்பு தந்த சிறப்பு
அரு. ஜோசப் கலசான்ஸ் மற்றும் தோழர்களின் தியாக வாழ்வு தரும்பாடம்
திருச்சிலுவை தரும் அமைதி
திருஅவையின் செய்திகள்

அன்பு நிறை வாசகர்களே!

இம்மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஆகஸ்டு 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்குச் சிறப்புப் பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியைக் குறிப்பிடவும்)

# ஆகஸ்டு மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 1 | செ | புனித அல்போன்ஸ் மரிய லிகோரி | விப.33:7-11,34:5-9,28 | மத். 13: 36-43 |
| 2 | பு | வெர்செல்லி நகர் புனித யூசேபியுஸ் | விப. 34: 29-35 | மத். 13: 44-46 |
| 3 | வி | | விப. 40: 16-21, 34-38 | மத். 13: 47-53 |
| 4 | வெ | புனித ஜான் மரிய வியான்னி | லேவி.23:1,4-11,15-16,27,34-38 | மத். 13: 54-58 |
| 5 | ச | புனித மரியாவின் பெருங்கோவில் நேர்ந்தளிப்பு | லேவி. 25: 1.8-17 | மத். 14: 1-12 |
| 6 | **ஞா** | **ஆண்டவரின் தோற்ற மாற்றம் விழா** | **I.** தானி. 7: 9-10,13-14<br>**II.** 2பேதுரு 1:16-19 | மத். 17: 1-9 |
| 7 | தி | புனித திருத்தந்தை 2ம் சிக்துஸ் | எண். 11: 4-15 | மத். 14: 13-21 |
| 8 | செ | புனித தோமினிக் | எண். 12: 1-13 | மத். 14: 22-36 |
| 9 | பு | சிலுவையின் புனித தெரசா பெனடிக்டா | எண். 13:1-2,25-33,14:1, 26-30, 34-35 | மத். 15: 21-28 |
| 10 | வி | புனித லாரன்ஸ், திருத்தொண்டர் விழா | 2கொரி.9: 6-10 | யோவா. 12: 24-26 |
| 11 | வெ | புனித கிளாரா | இச. 4: 32-40 | மத். 16: 24-28 |
| 12 | ச | புனித ஜேன் பிரான்செஸ் தெ ஷாந்தால் | இச. 6: 4-13 | மத். 17: 14-20 |
| 13 | **ஞா** | **பொதுக்காலம் 19ம் ஞாயிறு** | **I.** அர. 19: 9.11-13<br>**II.** உரோ. 9: 1-5 | மத். 14: 22-33 |
| 14 | தி | புனித மாக்சிமிலியன் கோல்பே | இச. 10:12-22 | மத். 17: 22-27 |
| 15 | செ | **கன்னி மரியாவின் விண்ணேற்பு பெருவிழா** | **I.** திவெ.11:19, 12:1-6.10<br>**II.** 1கொரி. 15: 20-26 | லூக். 1: 39-56 |
| 16 | பு | ஹங்கேரி நாட்டு புனித ஸ்டீபன் | இச. 34: 1-12 | மத். 18: 15-20 |
| 17 | வி | | யோசுவா 3: 7-10,11,13-17 | மத். 18: 21-19:1 |
| 18 | வெ | | யோசுவா 24: 1-13 | மத். 19: 3-12 |
| 19 | ச | புனித ஜான் யூட்ஸ் | யோசுவா 24: 14-29 | மத். 19: 13-15 |
| 20 | **ஞா** | **பொதுக்காலத்தின் 20ம் ஞாயிறு** | **I.** எசா. 56:1.6-7<br>**II.** உரோ. 11:13-15,29-32 | மத். 15: 21-28 |
| 21 | தி | புனித பத்தாம் பயஸ் | நீத. 2: 11-19 | மத். 19: 16-22 |
| 22 | செ | அரசியான புனித கன்னி மரியா | நீத. 6: 11-24 | மத். 19: 23-30 |
| 23 | பு | லீமா நகர் புனித ரோஸ் | நீத. 9: 6-15 | மத். 20: 1-16 |
| 24 | வி | புனித பர்த்தலமேயு திருத்தூதர் விழா | திவெ. 21: 9-14 | யோவா 1: 45-51 |
| 25 | வெ | புனித லூயிஸ், புனித ஜோசப் | ரூத்.1:1,3-6,14-16,22 | மத். 22: 34-40 |
| 26 | ச | | ரூத். 2:1-3,8-11,4:13-17 | மத். 23: 1-12 |
| 27 | **ஞா** | **பொதுக்காலம் 21ம் ஞாயிறு** | **I.** எசா. 22: 19-23<br>**II.** உரோ. 11: 33-36 | மத். 16: 13-20 |
| 28 | தி | புனித அகுஸ்தின் | 1தெச. 1: 1-5, 8-10 | மத். 23: 13-22 |
| 29 | செ | திருமுழுக்கு யோவானின் பாடுகள் | 1தெச. 2: 1-8 | மத். 23: 23-26 |
| 30 | பு | புனித யூப்ராசியா | 1தெச. 2: 9-13 | மத். 23: 27-32 |
| 31 | வி | | 1தெச. 3: 7-13 | மத். 24: 42-51 |